உ
ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

இதழ் 2 சித்தார்த்தி வருஷம் ஆவணி மாதம் 15ம்திகதி வெள்ளிக்கிழமை [31-8-1979] சுடர் 15

NATIONAL LIBRARY OF SRI LANKA RECEIVED 1979-9-19 PERIODICALS DIVISION

# சிவலோக நாதா நின் அருளின் வலிமை கண்டு திருவடி அடைந்தேன்.

**எம்ஈசன் சிவனது அருள் அளப்பரியது. அண்டி வந்தாரைக் காப்பதும் நோய் பிணி மரணம் வறட்சி கொடுமை இவை நீக்கியருளும் வல்லபமும் தெரிவிக்கும் திருப்பதிகம். இவைபோல் எங்காகிலும் காணலாமோ?**

## சிவன் அருளின் திறமைகள்.

அகில உலகம் எல்லாம் நின்னதே ஆட்சி! அவர் அவர்க்கு ஆங்காங்கு அருளிய வண்ணம் ஆர் அறியவல்லார். தொழுதகையராய் துதி பல சொல்லி போற்றிப் புகலாவதல்லால் வேறு வழியில்லை. திருப்புன்கூர் சிவலோகநாதா பெரியோர் அவர்கட்கு நீ அருளிய வண்ணம் கண்டு நானும் உன் திருவடி அடைந்தேன் என்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அவர் திருப்புன்கூரில் அமர்ந்தருளிய சிவலோகநாதன் என்னும் நாமம் உடைய சிவனைக் கண்டு பாடியருளிய திருப்பதிகம் ஒன்று இதன் கீழாகத் தருகிறோம். அப்பதிகத்தை நீங்கள் உணர்ந்து கருத்தில் கொண்டால் அன்று இருந்த அருள் நிலை தானாக நீர் உணர்வீர்! இந்த அருளின் நிலை அங்கு அக்கோவிலில் நிகழப்பெற்றால் இன்று அத்தகைய அருள் ஏன் பெறப்படுவதில்லை என்பதே கேள்வி? பெற்றதாயின் அதன் அருளிப்பாடு எவ்வாறாக இருந்தது என யாரும் வெளிப்படுத்தலாமோ?

## விஞ்ஞானவளர்ச்சியில் தெய்வநம்பிக்கைஇராது.

சிலர் கேட்கலாம் அல்லது நினைக்கலாம் அன்று தான் அருள் தேள்வைப்பட்டது! இன்று அது தேள்வை இல்லை. அருள் எமக்கு வேண்டியதில்லை, ஏனெனில் மழை இல்லாது போனால் நாம் விஞ்ஞான மூலம் மழை பெய்விப்போம்! நோய்க்கு திறமையான மருந்துகள் வந்து விட்டன. ஆதலினால் நல்ல மருந்தைச் செய்து நாம் வாழ்வோம். விஞ்ஞானம் முன்னேறி விஞ்ஞானத்தால் எல்லாம் செய்யப்போறோம் எனலாம். அதை யாரும் தடைப்படுத்த முடியாது.

இன்று நல்லூர் வேலுக்கு லயிற் அடிக்கும் முதலாளி இன்னும் சில நாள் கழிய சுவாமியை அப்படியே இயந்திர மூலம் தூக்கி சப்பறத்திலோ வாகனத்திலோ ஏற்றுவார். ஏனெனில் தேங்காய் நெய் தீவர்த்திகள் பிடிப்பது விஞ்ஞானம் முன்னேறிய காலத்தில் சிரமம் எனக் கண்டு லயிற் அடிக்கும் அவர் சுவாமியை வசந்த மண்டபத்தால் காவி வந்து வாகனத்தில் ஏற்றுவதில் சிரமம் கண்டால் அதற்கென ஒரு இயந்திரத்தைச் செய்வதில் ஆச்சரியமில்லை. அது நடைபெறக் கூடும். இதெல்லாம் இனி நல்லூரில் மட்டன்றி நாடு எங்கிலும் நடைபெறலாம். அப்பொழுது அருளின் செயல் வேண்டியதில்லை,

## விஞ்ஞானத்தின் வளர்ச்சி அகந்தையைப் பெருக்கியுள்ளது அருளை அகற்றியுள்ளது.

எனக்கு இந்த ஒரு நிலையில் ஒரு 'ஞாபகம் வருகின்றது' கந்தபுராணத்து அது தெரிவிக்கப்படுகின்றது. கந்தபுராணம் கற்பனை எனக் கருதப்பட்டாலும் அதில் ஒரு விடயம் மிகவும் இக்கால நிலைக்குப் பொருத்தமானது காணப்படுகின்றது. அது பின்வருமாறு!

வீரவாகுதேவர் முருகப்பெருமான் ஆணைப்படி சூரபன்மன் இருந்த தலைநகரமான வீரமகேந்திர புரத்திற்கு தூதாகச் செல்கின்றார். செல்கின்ற அவர்க்கு அங்கு உட்புக முடியாத காவல் இருந்தது. எனவே உட்புகுதற்கு வழி காணமுடியாத அவர் தமமை எவர்க்கும் தென்படாத வாறு அணு உருவமாக்கிக் கொண்டு ஒரு கோபுரத்தின் உச்சியில் நின்று சூரபன்மனுடைய நகரத்தனை நோக்குகின்றார்!

அவர் அங்கு விஞ்ஞானத்தின் வளர்ச்சியே காணுகின்றார். அசுரருடைய வாழ்வு அத்தனையும் எத்துணைச் சிறப்புடையதாக அமைந்தது எனச் சொல்லவந்த அவர் இங்கு கவலைப்படுவார் துயர்ப்படுவார் வறுமைப்பட்டார் ஒருவரையும் காணவில்லை, வேண்டிய இடத்தில் வேண்டியதெல்லாம் பெறும்படியான உல்லாச பிரயாண வாகனம் வீடு உணவு உடை இன்பம் அத்தனையும் பெறும்படி உளது. இங்கு மக்கள் விரும்பி அநுபவிக்கப்படுகின்ற இன்ப நிலைக்கு அளவே இல்லை. ஆனால் அங்கு காணமுடியாத இரண்டு பொருள் உண்டு எனின் அவை அன்பு அருள் என்றதாகும் எனக் கூறி தேவர்களுடன் அவற்றையும் சிறை வைத்தனனோ சூரன் என ஐயப்படுகின்றார். இதைத் தான் நாமும் இங்கு எடுத்து வலி உறுத்துகின்றோம். விஞ்ஞான உணர்வு மனிதனிடத்து அன்பு அருள் என்னும் இரண்டையும் தராது மற்று எல்லாவற்றையும் அது தந்து நிற்கும்.

விஞ்ஞானத்துறை கலியைப் பெருக்கவல்லமை உடையது. விஞ்ஞானத்தின் செயல் அத்தனையும் கலியை வருவித்து அன்பு அருள் என்ற நிலையைக் கெடுத்து விடும்,

## விஞ்ஞானம் அன்பு வழியை வருவியாது.

உதாரணமாக ஒருவர் தனக்கு சொந்தமான ஓர் கார் வண்டியில் ஏறிக் கொண்டவுடன் காணப்படும் அவரது மன நிலைக்கும் அவர் கார் இல்லாத நிலையில் சாதாரண நிலையில் இருக்கும் போது எழும் மன நிலைக்கும் எவ்வளவோ வித்தியாசம் காணப்படுகின்றது. ஒருவர் ஓர் காரில் ஏறிக்கொண்டு அதற்கு வகை அற்றவராக இருக்கும் இன்னுமொருவரைக் காணும் போது இவரும் என்னைப் போன்றவர் தான் என நினையும் மன எண்ணம் ஒருபோதும் வராது. அப்படி உள்ளவராக ஒருவரை நாம் இன்னும் காணவில்லை. ஏனெனில் அந்த கார் கலியின் விருத்தியானமையின் அது வந்தவுடன தானாக ஓர் தற்பெருமையின உணர்வைக் கொடுக்கின்றது. இது அப் பொருளின் பாவனையால் விளைந்த மனப்பாங்கு. இந்த நிலையில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி ஒவ்வொன்றிலுமே இந்த மனோபாவத்தை நாம் காணலாகும்.

ஆதலினால் விஞ்ஞானம் அருளின் பெறுபேறுகட்கு ஓர் இடையூறாக வந்து கொண்டது என்பதை நாம் உணரலாகும். இதை அருளின் தாகமுடையார் எவரும் உணரவேண்டும்.

அடுத்து விஞ்ஞானம் சிறுமை பெருமை என்னும் இரண்டினையும் வளர்ப்பதற்கும் தீங்கான கொலை களவு கட்டுப்பாடிலாமை காமாதி குணங்களின் பெருக்கம் கற்பு நெறி நீங்கல் இவைகளைத் தூண்டிடும் நிலையைத் தன்னிடத்துக் கொண்டது.

உதாரணமாக துவக்கு முதல் அணுகுண்டு வரையும் உள்ள ஆயுதங்கள் அழிவைச் செய்ய உள்ளன. ஒரு மனிதன் கொலை பாவம் என உணர்ந்தாலும் சந்தர்ப்பவசத்தில் அதாவது ஒரு துவக்கு இருந்தால் அதனாலே திடிரென ஓர் கொலையைப் புரிந்து கொள்கின்றான். இதனாலே இத்தகைய பொருள்களை வைத்திருத்தல் ஒருவரது ஆன்ம உணர்ச்சிற்கு இடையூறாக வந்து விடும்.

## இன்றைய விஞ்ஞானம் புதிதல்ல.

சிலர் இந்த ஒரு கேள்வியை எழுப்பலாம். விஞ்ஞானத்தின் விளைவால் உலக மக்கள் சுகங்கள் பெறுகின்ற போது விஞ்ஞானத்தைப் புறக்கணித்தல் தகாதே எனலாம். அதற்கு நாம் சொல்வது விஞ்ஞானத்துறை எதுவாயிருந்தாலும் அவற்றால் அருள் நிலை யாரும் அறிய மாட்டார் அடையமாட்டார் என அறிஞர் எப்பவோ நிச்சயித்துள்ளனர் என்பதை யாருமே மறத்தல் கூடாது!

நமது சைவ நெறியில் முழுவதும் உணர்ந்த பெருமுனிவர் பலர் காலத்திற்கு காலம் தோன்றியுள்ளனர். இவரில் பலர் மூன்று காலமும் அதாவது நடந்த நடக்கின்ற நடக்கப் போகின்ற வரலாறு அத்தனையும் உணர்ந்தனர். இவர்கள் இந்த உலகத்தின் உறபத்தி முடிவு நிலைபெறுங் காலம் இவற்றை உணர்ந்து கொண்டு உலக அமைப்பு இப்படித்தான் என நிச்சயித்து உணர்ந்து அதன் உண்மைகளை வேத மூலம் ஆகம மூலம் உபநிடத மூலம் ஸ்மிருதிகள் மூலம் புராணமூலம் உரைத்துப் போயினர்.

அவர்களது கொள்கைப்படி தோன்றிய எப்பொருளும் அழிவதும் பின்னர் தோன்றுதலுமாக உள்ளது. எனவே இப் பூமியும் தோன்றுவது பின்னர் அழிவது, தோன்றி நின்ற காலம் அளவு அழிந்து பெருவெளியில் நீராகி இப்பூமி அமைந்திடும் எனவும் அப்பொழுது எத்தோற்றமும் இராது எனவும் கண்டு கொண்டனர். இதனாலே இந்தக் காலத்தை யுகங்கள் என வகுத்து அவ்வாறே அவை அமையும் எனவும் கண்டு கொண்டனர்.

இவையாவும் கிரேத திரேத தூவபர கலி என நான்கு யுகங்களாக அமைந்து அந்த அந்த யுகத்தின் கால எல்லை பின்னான கலியில் நின்றும் இரட்டிப் பங்கு கூடியதாக இருக்கும் எனவும் அருளால் உணர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சுழற்சி கற்பனைக்கு எட்டாது.

ஒரு நாள் யோககசுவாமி என்னை நோக்கி நானும் நீயும் இன்றுள்ளவாறு போல் எத்தனை தரம் வந்து போனேமோ அதை ஆர் உணர்வார் எனச் சொன்னவர். ஆதலினுலே இந்த உலகத்தையும் அதன் வரலாற்றையும் உணரப் போனுல் அதன் உண்மை கற்பனை அநு மானித்தல் என்னும் இநமைக்கும் அப்பாற் பட்டது.

விஞ்ஞானம் சடப் பொருள்களைக் கொண்டு தான் வளர்கிறது. ஆன்ம ஞானம் அப்படி அன்று. அது சட சம்பந்தம் இலாதது. இப்படியாக எமது முன்னைப் பெரியோர் உணர்ந்து தெளிந்து கொண்டமையால் அவர்கள் விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலோ அல்லது விருத்தியிலோ அக்கறை கொள்ளவில்லை.

இன்றைய அளவு விஞ்ஞான வளர்ச்சி முன்பிருந் திருக்க மாட்டாது என நாம் கொள்ள முடியாது. ஏனெனில் கந்த புராணத்து நகரச் சிறப்பில் சில யுத்தக் கருவிகளின் பொறி இயல் நுட்பம் பேசுகிருர். அவற்றில் பறப்பன எழுவன நெருப்பு வீசுவன சுடுவன தாக்குவன என பலவகை யுத்தகருவிகளைப் பற்றிக் கூறிவிட்டு ஓர் நிலையில் முன்புள்ள விஞ்ஞானம் எதிரிகளின் போர்படை வீரரது மூளைகளை யுத்தத்திறனை மங்கச் செய்வன. நாக்கை பேச முடியாது துண்டித்தே விடுவன என சில யுத்தக் கருவிகளின் பொறியியல் நுட்பம் பேசுகிருர். எனது கந்தபுராண உரையுடன் கூடிய பதிப்பு பக்சம் 55 பக்கம் காண்க, இதனை நம்மவர்கள் நன்கு தெளிவுறக் கொண்டால் இப்பூமி இன்று மட்டு முள்ளதல்ல நெடுக உள்ளது என்ற மன நிலையை ஏற்படுத்தலாம். அடுத்து இவ்வளவும் உணர்ந்த மகான்கள் விஞ்ஞான வளர்ச்சியில் உயர பல சாதனை ஏன் கிழக்கு நாட்டில் பெற்றுக் கௌ்ளவில்லை என்ருல் அதற்குப் பதிலாக முன்னமே நாம் காட்டியது போன்று விஞ்ஞானம் தரும வழிக்கு உதவாது என்பதை உணர்ந்து கொண்டதே காரணமாகும்.

எமது முன்னைப் பெரியோராம் முனிவர்களது அந்தணர்களது கொள்கைப் படி உலகின் அமைப்பு கருணையின் பிறப்பிடமான தருமத்தில் நிலை யானது. தருமத்தை உணராதவன் அதன்படி ஒழுகாதவன் உண்மைப் பொருளானதை என்றும் காணமாட்டான். ஆதலினுல் பிரம வித்தைக் குரியவர் யாவரும் அறவோர் என அழைககப் பட்டனர்.

இதனுலே தான் சமயங்கள் எல்லாவற்றிலும் சைவத்திற்கு ஒரு தனிச் சிறப்பு எவ்வாறெனில் சைவம் தருமத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை விஞ்ஞான வளர்ச்சியின் உச்ச நிலையில் நிற்பார் பலர் உணரமுடியாது தடுமாறி விஞ்ஞானம் தமக்கு வந்த நிலை மிகப்பெரியது என நினைந்தனர், அதனுல் அருளில் நம்பிக்கை உடைய பலரையும் இகழ்ந்து ஏமாற்றி சமய நிலையை வியாபாரமாக்கிக் கொண்டனர்,

எத்தனை மிகப்பெரிய பாதகங்களை அபசாரமுடைய செயல்களை சினிமா நடிகரான பேதையனை சுவாமி எனப் போற்றி வரவேற்றீர்கள். யாழ்ப்பாணத்து ஆரேனும் சைவப்பெண் என்று மேடை ஏறிச் சொற்பொழிவு செய்வாரை மங்கையர்க்கரசியாரிலும் மேம்படுத்தி பேதை மக்கள் பலர் கோவில் சந்நிதானங்களில் வைத்து பேசினுரே மங்கையர்க்கரசியாரின் சீலம் யாழ்ப்பாணத்து படித்த வித்துவான்களுக்கும் பண்டிதர்களுக்கும் விளங்குமோ?

## சைவம் வளர்ப்பது என்ருல் மேடைப்பேச்சோ?

மேடையில் இனிமையாகப் பேசினுல் அது சைவம் வளர்ப்பது என்பதோ? மங்கையர்க்கரசியாரை சம்பந்த சுவாமிகள் "சிவன் திருநீற்றினை வளர்க்கும் பங்கயச் செல்வி" என்ருரே! சிவன் திருநீற்றினை மங்கையர்க்கரசியார் மேடைப் பேச்சு மூலம் வளர்த்தாரோ? அல்லது பெண்கட்குரிய எல்லை வரம்பில் நின்ற தூய ஒழுக்கத்தாலும் பத்திமை நெறியாலும் வளர்த்தாளோ? மங்கையர்க்கரசியார்க்கு எத்தனை பட்டம்? எத்தனை பொன்னுடை எத்தனை பாராட்டுவிழா?

தருமம் என்ற ஒரு கொள்கை இன்று சைவ நெறியைப் பேணும் அல்லது பிரசாரம் செய்யும் எவர்க்குமே விளங்கவில்லை, ஏனெனில் தருமத்தின் கொள்கையில் தான் நாயன்மார் எல்லாரும் நின்ருர்.

## நாயன்மாரும் தம்பாடலிற்கு காசு கேட்டவரோ?

நாயன்மார் அத்தனைபேரும் தாம் பாடியருளிய பதிகங்கட்கு காசு கேட்டாரோ? இந்தக் கோவிலுக்கு இன்றைக்கு நீ வா பாடு என்று யாரும் அச்சவாரம் வைத்தவரோ? இளையான் குடிமாற நாயனுர் அன்பர் பூசை செய்ததற்கு சிவதர்மவள்ளல் என்று பட்டம் ஆரும் கொடுத்தாரோ? சம்பந்தருக்கு எங்காகிலும் ஓர் பாராட்டு விழா பொன்னுடை போர்க்கப் பட்டதோ? தென்இந்தியப் பேதைப் பிரசாரகரை பொய்யரை வம்பரை வஞ்சகரை நீங்கள் அழைத்து தேர்மேல் ஏற்றி கொடி எடுத்து குடை பிடித்து கோயில் சந்நிதானத்தில் வைத்து விழுந்து கும்பிட்டது போல் நாயன்மார் ஆருக்கும் நடந்ததா! யாழ்ப்பாணத்து ஆரும் சைவம் விளங்கியோர் இருந்தால் சுயவு செய்து பதில் தாருங்கள்.

குலச்சிறையாரை சம்பந்தர் பெருமான் தவம் பணி குலச்சிறை என்ருரே தவம் பணிதல் எனருல் அவாள் இவாள் எம் பிள்ளை ஆமா சொல்லிட்டேன் வர்ரீங்களா உட்காருங்க வாங்க வாங்க இட்டிலி விருந்திலே கலந்திடுங்க நம்ம சினிமாவிலே நீங்களும் பாட்ரேக் பண்ணுறீங்களா? என்றெல்லாம் சொல்லி காசு பெற்று கள்ளக்கடத்தலால் காசு கொண்டோடியிருப்பாரா குலச்சிறை? நம்மவராம் யாழ்ப்பாணச் சைவரே தவம் பணிதல் என்ருல் என்ன என்று தெரியுமோ?

## தருமத்தின் வழியே தவம்.

இது தான் உண்மை நிலை. எந்த ஒரு சைவனும் தன்து தொண்டை தரும முறையாகச் செய்யாத பொழுது அங்கு தவம் இல்லை. ஏனெனில் கந்த புராணத்து ஓர் பாடல்மூலம் சுசியப்பர் இதைதெரிவிக்கின்ருர். அவர் சொல்வார் தருமம் செய்தவர்க்கே அன்பு வரும்! அன்பு வந்த பின் தான் அருள் வரும்! அருள் நிலை கை கூடிய பின்பு தான் தவம் வரும்! தவத்தின் உயர்வால் சிந்தை தெளிவு பெறும் சிந்தை தெளிவு கொண்ட பின்னக் அந்த உயிர் சிவனைச் சேரும் என்கின்ருர். இவை நியதி, அதாவது ஓர் வித்து முளைத்து வளர்ந்து மரமாகி பின்னர் பலன் தரும் தன்மைபோல் இதுஅமைவது. இதில் அந்தந்த பருவ ஒழுங்குகள் நிகழப்படல் காணப்பெறலாகும்.

இதே போன்றது தான் சைவசமய சீலங்களும். யாழ்ப்பாணப்பெரியோரே தயவு கூர்ந்து நாம் சொல்வதை உங்கள் சிந்தையில் சிந்தித்து தெளியுங்கள். எங்கள் சைவ ஆலயங்கள் அத்தனையும் அறத்தின் வழி தருமத்தின் வழி அமைவதாயின் எம்பெருமான் சுந்தரர் இப்பதிகத்து மொழிவது போன்ற சிவனது பேரருளின் அநுக்கிரகத்தை என்றும் பெறலாகும். விஞ்ஞான உணர்வின் இயந்திரங்கள் பாவிக்கப்படும் அல்லது வியாபார நோக்கமாக நிர்வகிக்கப்படும் எந்த ஒரு ஆலயத்திலும் இப்பதிகத்து காட்டிய அற்புதங்கள் நிகழவே மாட்டாது இதை துணிவுடன் எடுத்து மொழிகின்றேன். நாம் தற்க மேடி ஒன்றும் சொல்ல முடியாது. நமது கருத்திற்கு பெரியபுராணப் பாடல் முழுவதையும் சாட்சியாக வைக்கிறேன்.

## கோயில் என்பதின் பொருள்.

கோ சுக இல் என்பதே கோயில் என வந்தது. அதன் கருத்து கோ என்ருல் தலைவன். இல் என்ருல் இருக்கும் வீடு என்பது பொருள். தலைவன் என்ருல் இந்த உடம்புடன் வாழும் பொழுதும் உடம்பு இறந்த பின்னரும் என்றும் தலைவன் அவனே! கோயிலை சம்பந்த சுவாமிகள் தலைவர்க்கிடம் போலும் எனச் சொல்வார். எமது சமயகுரவரான நாயன்மார் அத்தனை பேரும் கோயிலை தலைவர்க்கிடம் முதல்வர்க்கிடம் பெருமாற்கிடம் என்று மிக்க பரிவுடன் போற்றி உள்ளனர். ஆதலால் இந்த தலைவர் இருக்கும் இடத்து மிக்க பயபத்தியுடன் அவர்கள் நடந்து வலம் வருதல் கும்பிடல் பாடல் பாடுதல் முதல் பல தொண்டினைச் செய்தனர்.

உண்மையில் முன்பு இறைவன் இருப்பிடங்கள் மிகு பத்திமையுடன் பேணப்பட்டன. அங்கு எதுவிதமான வியாபாரம் வேடிக்கை கேளிக்கை பிரசாரம் முதல் அனைத்தும் நீங்கப் பெற்றிருந்தன. இதை இன்று யார் உணர்கிருர். அதனுலே தான் கோயில் தொண்டு செய்வார் அனைவரும் பெருமதிப்புக்குரியவராக வணக்கத்திற்குரியவராகக் கருதப்பட்டு மிகு அன்புடன் பேணப்பட்டவர், இன்று இவை நீங்கி கோயில் தொண்டு செய்வார் கூலியாளராக சம்பளத்திற்கு வேலை செய்பவராக வரும்படி நோக்கித் தொண்டு செய்பவராக உளர். இவர்கள் பண வருவாயின் சிறப்பை கருதியதால் அதனுல் அவர்கள் காடையராகவும் மது அருந்துவோராகவும் தம் நெறிக்குரிய ஒழுக்கமிலாதவராகவும் வந்தனர். இன்று எந்தக் கோயிலை எடுத்தாலும் எல்லாம் வியாபாரமயமாக உளது. ஒரு கோவிலை யாதல் இங்கு வியாபார நோக்கமிலாத கோயில் இது தரும வழிக்கு உரிய கோயில் இது என்று காட்ட முடியாதே இருக்கின்றது,

## கோவிலை மதித்து நடவுங்கள்.

கோயில் தொண்டு செய்வார் தொண்டாக அதைக் கருதுவராயின் நிச்சயமாக அங்கு அருள் பெருகும். இந்த நிலையில் தான் முன்பு தொண்டுகள் செய்வார்க்கு சீவியத்திற்கு பொருள் கொடுங்கள். அப்படிக் கொடுத்தல் கொடுப்பார்க்கு மரண அவத்தையையே நீக்கும் என திருநாவுக்கரசர் மொழிகின்ருர். இப்படியான நிலையில் தொண்டும் புனிதமாயது கோயிலும் புனிதமாயது.

ஒரு ஜனதிபதியின் இருப்பிடந்திலோ அல்லது நீதி அரசரின் இருப்பிடத்திலோ நாம் எவ்வளவு பயத்துடன் மரியாதையுடன் நடக்கின்ருேம். அங்கு ஒலிபெருக்கியில் சினிமாப் பாட்டும் போட்டு கையில் சிகரட்டும் வைத்து புகைத்து கைத்தாளமும் போடலாமா? இவை செய்தால் என்ன நடக்கும் தெரியுமோ?

ஆதலினுலே தலைவனது இருப்பிடத்தில் எவ்வளவு பயபத்தியுடன் நடத்தல் வேண்டும் எனச் சிந்தியுங்கள். எங்கள் கோயிலை உயர்ந்த இடமாகக் கருதி நாம் ஒழுகி உலகிற்கு எம்பெருமையைக் காட்ட வேண்டும். கோயில் மேடைமேல் சமயப் பிரசங்கம் செய்து நாயன்மார் சரித்திரம் போதிப்பதிலும் கோயிலை அதன் ஒவ்வொரு எழுத்தின் கருத்திற்கமைய நடத்த முற்படல் எல்லாச் சைவரது முதற் கடமை யாகும.

## பிழை செய்வார் திருந்தாமைக்கு காரணம்.

பலருக்கும் இந்த உண்மைகள் விளங்காமல் இல்லை, தெரியும் தெரியாமல் இல்லை, இந்த உண்மைகளை பொது அறிவால் யாரும் விளங்கிக் கொள்ளலாம், நன்கு விளங்கலாம், ஆனுல் நாங்கள் பிழை விட்டுட்டோம். இவர் சொல்லி என்ன திருந்திறது என்ற அகந்தையின் மனப் பாங்கு பலருக்கும் உண்டு, நாம் என்ன செய்யலாம் துன்பப்படுமுன் சிலர்க்கு சில உண்மைகளைப் போதித்தால் ஏற்கார்! ஏன் என்ருல் அவர் கொண்ட அகந்தையின் அழுக்கு அத்துணைப் பெரிதாக இருத்தலின் உண்மை உணர்ந்து திருந்தி நல் நிலைப்பட முடியாமல் வரும்! இதை நாம் நன்கு விளங்குகின்ருேம்.

இன்று பல பிராமணர் பிரசாரகர் [ஆண் பெண்] திருப்பணிச்சபையினர் எஜமான்கள் எல்லாரும் சூரன் இராவணன் தக்கன் அசமுகி இவர் போன்ற நிலையில் இருக்கின்றனர். அவர்க்கு எது சொல்லியும் ஏருது. அவர் எல்லாவற்றிலும் தமது மானத்தை தற்பெருமையை மேலாகக் கருதுவர். அதைத் தெரிந்தும் இவர் ஏற்கார் என்பதை உணர்ந்தும் நாம் சொல்கின்ருேம் எதற்காக!

சைவம் எல்லா நெறிகளிலும் மிக உயர்ந்தது. என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசம்பந்தமானது. அதாவது கடவுளின் நேரடியான தொடர்புடன் விளங்கிடுவது, இப்படியான ஒரு சமயத்தை பிராமணரும் பிரசாரகரும் திருப்பணிச் சபைகளும் எஜமான்களும் தமது வயிறறுப் பிழைப்பிற்குரிய நெறியாக்கிட; தவருன வழியில் நடத்திடப் பார்த்திருக்க விருப்பமில்லே; நாம் பெரிய புராணம் கந்தபுராணம் முதல் பல நூல்களே உரை எழுதி அச்சேற்றி வைத்தமையால் எல்லாரும் இன்றைய சமுதாய அமைப்பில் அதன் புனிதத்தை விளங்கமுடியாத நிலேயில் அங்கு காணப்பட்ட உண்மைகளே உலகறியச் சொல்ல வேண்டி என் மனம் அவாக்கொண்டது, அந்த அவாவே சந்திரதீபமாகும்.

## முன்னேய பெரியோரே தீபத்திற்கு வழிகாட்டி.

தக்கன் சிவனே நோக்கி தவம் செய்து அவர் அருளால் எல்லாஉலகிற்கும் தலேவனுனன். அவன் ஆணைக்கு கட்டுப் படாதவர் ஆருமே இலர். எத்தேவரும் அவன் ஆணைக்குட் பட்டவர். பிரம விட்டுணுக்களும் அவன் ஆணைக்குட்பட்டவர் என்றுல் பின்னர் வேறு என் சொல்லலாம்.

இந்த தலமைப் பதவியின் ஆங்காரம் பெரிதாக வளர்ந்து தனது உயர்விற்கு வரம் அருளிய எம்பிரான் சிவனிடத்தும் தனது ஆணையைச் செலுத்த முயன்முன். அது பலிதமாக வில்லே. அதனுலே அவர் மேல் வெறுப்பு வந்தது. பகை பெருகியது. இதனுல் தனது அதிகார முறையில் சிவனது முதன்மையை நான் நீக்குவேன் என முயன்று அவர்க்கே முதல் கொடுபட வேண்டிய அவியை நீக்கி வேறு கடவுளர்க்கு அதனைக் கொடுத்திட வேண்டி ஓர் யாகம் செய்தான்.

அந்த யாகத்து எல்லாரும் வந்திருந்தனர். ஆனுல் அகத்தியர் முதல் முனிவர் வரவில்லே. வரமனமில்லாத முனிவர் கூட்டத்தில் ததீசி முனிவரும் ஒருவர். அவர் அழைப்பின் பேரில் தக்கனிடம் சென்று அவன் செய்யும் யாகம் தவருன வழி உள்ளது என மொழிய; தக்கன் அது கேட்டு ஆத்திர முற்று சிவனே இகழ்ந்து பேசினுன். அவருடைய குணங்கள் பற்றி இழிவாகப் பேசலும் ததீசி முனிவர் சொல்வர் தக்கனே செல்வ இறுமாப்பின் மூலம் நீ பேசுகின்முய். அறிஞர் உன் முன் வார்த்தை பேசாது அகன்று விடுவார். ஆனுல் எனக்கு இவ்வளவு பேரும் கூடிய சங்கத்தில் எம்பிரானே நீ இகழ்ச்சி போல் கூறியவற்றுக்கு காரணம் கூறுமல் போக மனம் வரவில்லே என மொழிந்து தக்கன் கேட்ட கேள்விகட்கு தகுந்த பதில் சொல்கின்முர்.

அதனுலே மிலேச்ச நாகரீகப் பொருள்களேப் பெரிதெனமதித்து பேதமையான பலர் மேன்மையான நம் சைவநெறியை பாழ்படுத்திப் போகவும் கோவிலேயும் ஆகமங்களேயும் அழித்தொழித்திட முயல்வதையும்கண்டுநம் பணியாக உண்மையைச் சொல்வோம். எமது சமய நெறிகளே கீழ் இறக்கிய பிராமணர் பிரசாரச் செல்வர்கள் செல்விகள் எதனே வேண்டுமானுலும் செய்யட்டும். உலகமக்கள் அதாவது சைவர் அல்லாத ஏனேய மதத்தினர் எம் சமயத்தின் பெருமையை உணரட்டும் என்ற அவாவால் இப்பொழுது இப்பத்திரிகை மூலம் உண்மையை விளங்க வைக்கின்றேன்.

கோயில் இருந்தால் அதற்குரிய நெறியும் ஒழுக்கமும் இல்லாத போது அது இருந்து பலனில்லே. அத்தகைய கோவில் ஓர் காட்சிச் சாலேயோ அல்லது கல்வி நிலேயமாகவோ இருக்கலாம். அல்லது கைத்தொழில் நிலேயமாகவோ அல்லது காணிவல் போல ஆகட்டும். நமக்கு அவை பற்றிச் சிந்தனே இல்லே. நமது பணி இறைவனது ஆலயத்தில் நடைபெறவேண்டிய நற்கருமத்தைசிதைவாக்கிவீண்செயல்பெருகாதுபாதுகாத்தலாகும்,

திரு சிற்றம்பலம்

**அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது காரணமாக**
**வந்த காலன்தன் ஆருயி ரதனை வவ்விஞய்க் குன்தன்வன்மை கண்டடியேன்**
**எந்தை நீஎனை நமன்தமர் நலியின் இவன்மற் றென்அடியான் என விலக்கும்**
**சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப்புன்கூர் உளானே.**

ஓர் பிராமணப் பிரமச்சாரி மார்க்கண்டன் என்பவன் தனக்கு நேரவரும் கால முடிவை உணர்ந்து அத்தீங்கில் நின்றும் பாதுகாப்புற தேவரீது திருவடிக்கே. அடைக்கலமாக வந்து அபயம் புகுதலும். அண்டி வந்தாரைப் பாதுகாப்பது காரண மாதலால் அந்த பிராமணப் பிள்ளேயைக் கொல்லும் படி வந்த காலனது அரிய உயிரை நிக்கிய உனது வலிமையின் திறத்தினேக் கண்டு; எந்தை பெருமானே நானும் மார்க்கண்டனேக் கொல்ல வந்த இயமனது தூதுவர்கள் அவ்வாறு எனேத் துயருறுத்து வாராயின் அந் நேரத்து அத் தூதுவரிடம் இவன் எனது அடியவன் இவனே ஒன்றும் செய்து போடாதீர்; என தேவரீர் தூதுவரின் பிடியில் நின்றும் என்னே விலக்கிக் கொள்வீர் என்னும் நம்பிக்கையால் உமது திருவடிகளே தஞ்சமாக வந்து அடைந்து கொண்டேன் திருப் புன்கூர் என்னும் தலத்து அமர்ந் தருளிய எம் கடவுளே!

அடைக்கலமாக வந்தவரைக் காத்தருளினுய் என்னேயும் அவ்வாறு காத்தருளுவாய் என்ற நம்பிக்கை திருவடிகளே வநீதடைந்து கொண்டேன் என்கின்முர். எனவே அன்றிருந்த அருள் இன்று இல்லாமல் போக முடியாது! சிந்தையால் என்றது நம்பிக்கையால் என்றவாறு. 1

**வையக முற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலே மாநிலந் தருகோம்**
**உய்யக் கொள்கமற் றெங்களே என்ன ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்**
**பெய்யு மாமழைப் பெருவெள்ளந்தவிர்த்துப்பெயர்த்தும்பன்னிருவேலி கொண்டருளும்**
**செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப்புன்கூர் உளானே.**

அன்று ஒரு நாள் இப்பூமி முழுவதும் பெரும் வறட்சி காரணமாக மழை இல்லாது போக; அதனுலே இந்த ஊர் மக்கள் உன் கருணேயை நம்பி வாழ்பவர் தேவரீரை அணுகி திருப் புன்கூர் ஈசா வயலில் நீர் இல்லாமல் போயது உமக்கு திரு அமதுப் படிக்கு 12 வேலி நிலம் காணிக்கையாகத் தருவோம்! வறட்சியால் வாடும் எம்மை இன்னமும் துயருற வைக்காது உய்ய நீர் சித்தம் சொண்டருள்வீர் என வேண்டிட அவர்க்கு இரங்கி உன தருளால் ஒளி கொண்ட வெண்முகிலாக எங்கும் பரந்து பெருமழை எங்கும் பெய்யும். அப்படி பெய்திடும் மழை ஓயாது பொழிதலால் எங்கும் பெருவேள்ளமாயது இதைக் கண்ட ஊர் மக்கள் பெருமானே! உன் கருணேயின் திருவிளேயாடல் நாம் அறியோம் தயவு செய்து இந்தப் பெரு வெள்ளம் நீக்கி பருவ மழையாகப் பெய்திடற்கு உமக்கு 12 வேலி நிலம் தருவோம் என வேண்டிட அவர்க்கு இரங்கி திரும்ப பன்னிரண்டு வேலி நிலம் பெற்று பெரு வெள்ளம் நீக்கியருளி பருவமழை பெய்வித்த உனது செய்கை கண்டு நானும் உன் திருவடி அடைந்தேன் செழுமை வாய்ந்த சோலேயின் சிறப்புடைய திருப் புன் கூரில் இருக்கும் கடவுளே!

துயரப்பட்டார் 12 வேலி நிலம் கொடுக்கப் பெற்று அருள் புரிந்த அற்புதம் பேசப் பட்டது, இவை திருப் புன்கூர் ஈசன் செய்த திருவிளேயாடல்கள், திருப் புன்கூர் ஈசனது அருட் சிறப்புக்கள். அற்புதம் அவற்றை இங்கு வரிசையாக பின்னரும் சொல்வார் எம் பெருமான் சுந்தரர். 2

**ஏத நன்னிலம் ஈரறுவேலி ஏயர் கோன் உற்ற இரும்பிணி தவிர்த்துக்**
**கோத னங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன் தன்மேற் சென்ற**
**தாதை தாள்அற எறிந்தசண் டிக்குன் சடைமி சைமலர் அருள் செயக் கண்டு**
**பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன் பூம்பொ ழில்திருப் புன்கூர் உளானே.**

நன்மையுற்ற நிலம் 12 வேலி பெற்று ஏயர் கோனுர் என்னும் அன்பர்க்கு வந்த கொடிய நோய் தவிர்த்தும். அதுவன்றி பிராமணப் பிரமச்சாரி சண்டேசுவரர் பசுக்களின் முலேயில் உற்ற பாலேத் தாம் கறந்து வெண்மணலால் செய்த சிவலிங்கத்தின் மேல் திருமஞ்சனம் ஆட்டிட; அது கண்டு இது முறை அன்று தவறு எனக் கோபமாகி மகன் தாபித்த சிவலிங்கத்தை குழப்பு மாறு வேகமுடன் சென்ற தந்தையின் கால் அறுந்திட வாளால் வெட்டிய அத் திருமகனுர் சண்டேசுவரர்க்கு உமது திருச்சடை மீது அணிந்த பூமாலே அணியும் படி கழற்றிக் கொடுத் தருளிய தன்மையைக் கண்டு பூதங்கட்கு எல்லாம் தலேயான பெருமானே நின் பொன்னடிகளே நான் தஞ்சமாக அடைந்தேன்! பூக்கள் மலரும் சோலே சூழ்ந்த திருப் புன்கூரில் இருந்தருளும் பெருமானே சிவலோக நாதனே,

தேவரீர்க்காகச் செய்திடும் தொண்டில்; தவறிழைப் பாரைத் தண்டித்தாலும் அது பழியாகாது என்பதைத் தெளிந்து அத்தகைய புண்ணிய முடைய சண்டேஸ்வர நாயனுர்க்கு உம் சடை மீது அணிந்திருந்த மாலே கொடுத்த வண்ணம் கண்டு திருவடி அடைந்தேன் திருப் புன்கூர் சிவலோக என்னே ஏற்றுக் கொள்வாய் என்றதே விண்ணப்பமாகியது, 3

**நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன் நாவி னுக்கரையன் நாளேப்போ வானும்**
**கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்**
**குற்றஞ்செய்யினும் குணம்எனக்கருதும்கொள்கைகண்டு நின்குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும் பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே.**

நல்ல தமிழில் வல்ல ஞானசம்பந்தன் நாவிற்கு அரசன் நாளேப் போவான் எனும் சீர் பெயருடைய நந்தன் கல்வியில் மேம்பாடுடைய சூதன் நல்ல புத்தர் வேடத்தில் நின்ற சாக்கியன் திருவானேக்காவில் நூலால் பந்தரிட்ட சிலந்தி விடியுமளவும் விளக்கெரிக்க கணம் புல்லு காணுமல் போக தன் தலேமயிரை அறுத்து எரித்த கணம் புல்லர் எனப்பட்ட இவர்கள் குற்றம் செய்தாலும் அது சரி எனக் கருதுவது உனது கொள்கையாய் இருக்கக் கண்டு பின்னர் நானும் தெளிந்து என் பிழை பல பொறுப்பாய் என்று நின் சிலம்பணிந்த திருவடிகளே அடைந்து கொண்டேன் பொன் திரண்ட முத்துப் போலும் தாமரை மலர்கள் மலரும் குளங்கள் சூழ்ந்த திருப் புன்கூர் இருந்த என்கடவுளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான சம்பந்தர் செய்த குற்றம்;— ஞான சம்பந்தர் சமணரைக் கழுவேறப் பண்ணியது. பாண்டியனுக்கு வெப்பு நோய் கொடுத்தது; புத்த குருமாரின் தலைவனது தலை முறிந்து தெறித்து புரண்டோடப் பண்ணியது போன்ற இவைகள்,

திருநாவுக்கரசர் செய்த குற்றம்;— சமணனாக மாறியது; தனக்காக தன் உயிரைப் போக்காது காத்திருந்த தமக்கையார் திலகவதியாரை தனித்திருக்க விட்டுப் போனது. தருமசேனன் என்ற பட்டம் பெற்றது இப்படிப் பல. திரு நாளைப் போவான் (நந்தன் செய்த குற்றம் நாளைக்குச் சிதம்பரம் போவேன் நாளைக்கு சிதம்பரம் போவேன் தில்லை செல்வது தன் குலத்திற்கு பொருந்தாது என்ற பயத்தால் எழுந்த பதைப்பில் தன்னை ஏமாற்றியது. போயும் உள்ளுக்கு போகாமல் வெளி மதிலோடு பயத்துடன் ஒருபுறம் ஒதுங்கி நின்றது. பிறகு உள்ளாகப் போனது, தன் குலத்து பறையரோடு ஒத்து வாழ (முடியாமல் சண்டை பிடிப்பது இப்படி அவன் செய்த குற்றம் பல) எனினும் அடியேன் சிரசில் அவன் திருவடி ஓங்கி நின்றது,)

கல்வியில் சிறந்த சூதன் செய்த குற்றம்;— குருவான வியாசனிடம் புராணங்களைக் கேட்டும் எல்லாரும் கேட்கச் சொன்னது. தான் வேளாள குலத்தினனாயினும் அந்தணருடன் ஒப்பப் பேசியது. அவருடன் ஒப்ப இருந்தது.

நல்ல சாக்கியன் செய்த குற்றம்'— புத்தனாக இருந்து சைவனாக மாறியும் புத்தருடைய உடையை மாற்றாது விடுத்தது. சிவலிங்கத்திற்கு கல்லால் எறிந்தது. கல்லால் எறிந்த பின்பு சாப்பிடுவது:

சிலந்தி செய்த குற்றம்;— சுவாமி மேனி மேல் சருகு விழா திருப்பதன் வாய் நூலால் பந்தரிட்டு அசுசியான வலை கட்டியது அறுத்தெறிய வந்த ஆனைக்கு குத்தியது.

கண்ணப்பர் செய்த குற்றம்;— செருப்பால் திருமேனிமேல் இருந்த பூவைத் தட்டிக் கீழ் விழ்த்தியது. வாய் நீரைச் சிரசில் உமிழ்ந்தது. எச்சில் பட்ட இறச்சியை உண்ணப் பண்ணியது. கொண்டையில் கொண்டு வந்த பூவைத் திருமுடிமேல் சூட்டியது தனது கண்ணைத் தான் தோண்டியது.

கணம் புல்லன் செய்த குற்றம்;— இவர் தினம் தோறும் சுவாமிக்கு விளக் கெரிப்பவர், விளக் கெரிக்க நெய்வாங்கப் பணம் பெற கணம் புல்லு அரிந்து அதை விற்று அதன் வருவாய் கொண்டு நெய் வாங்கி விளக் கெரிப்பவர். ஒரு நாள் கணம் புல்லு வாங்குவார் இல்லை. பின்னர் கணம் புல்லை அடுக்கி விளக்காக எரித்தார். விடியுமளவும் விளக் கெரிக்க கணம் புல்லு காணாமல் போயது. பின்னர் கணம் புல்லுக்குப் பதிலாக தன் தலை மயிரை அரிந்து அதை எரித்தார். அதுவே குற்றம்: இப்படியாக இவர் போன்ற பல அடியார் செய்த குற்றங்களை மேலும் குறிப்பிடுவராய் பிள்ளையை வெட்டிச் சமைத்த சிறுத்தொண்டர் தன்மனைவியைப் பிறன் கையில் கொடுத்த இயற்பகை முதல் பலரையும் குறிப்பிடுவாராய் என்ற இவர்கள் எனச் சொல்லினார்.

**கோல மால்வரை மத்தென நாட்டிக் கோளரவு சுற்றிக் கடைந்தெழுந்த**
**ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய அமரர் கட்கருள் புரிவது கருதி**
**நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு கண்டத் தேவைத்தபித்தநீ செய்த**
**சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.**

தேவர்களும் அசுரரும் கோலம் மிகுந்த பெருமலையை மத்து என நிலை நாட்டி: பொறி உடைய வாசுகி என்னும் பாம்பை கயிறாக அந்த மத்தில் சுற்றி பால் கடல் கடைந்த போது எழுந்த ஆலகாலம் என்னும் நஞ்சு கண்டு பயந்து அவர் மிகு வேக முடன் ஓடிட; அத்தேவர்கட்கு இரங்கி நீ அருள் புரிவது எண்ணி; நீலநிறம் விளங்கும் அரிய அப்பால் கடலில் எழுந்த நஞ்சினை உண்டு உம்திருக் கழுத்தில் தங்கிட வைத்த பித்தனே நீ அவ் வண்ணம் செய்த கருணையின் சீலம் கண்டு நின் திருவடிகளைச் சரணமாக அடைந்தேன் செம்மை திகழும் சோலை சூழ்ந்த திருப் புன்கூரில் இருந்தருளும் கடவுளே!

பித்தன் என்றது மற்றவரைக் கொல்ல வந்த நஞ்சை; ஓர் பைத்தியக்காரன் முன் பின் எதனையும் யோசியாமல் செய்வது போன்று உண்டு விட்டனை! பயித்திய காரனது செயல் போன்றாலும் அதிலும் ஓர் சீலம் கண்டேன் என்கின்றார்.

தேவர்களும் அசுரரும் இறவாமல் இருப்பதற்கு அமுது பெறும்படி பாற் கடல் கடைய முற்பட்டனர். அதன் முன்னாக எழுந்தது, இது உண்டு காத்தருளிய கருணை இங்கு பேசப்பட்டது. 5

**இயக்கர் கின்னரர் யமனொடு வருணர் இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்**
**மயக்கம் இல்புலி வானரம் நாகம் வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்**
**அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை அர்ச்சித் தார்பெறும் ஆரருள்கண்டு**
**திகைப்பொன் றின்றிநின் திருவடிஅடைந்தேன் செழும்பொழில் திருப்புன்கூர்உளானே**

இயக்கர்கள் கின்னரர்கள் இயமன் வருணன் இ ங்கிடும் அக்கினி காற்று சூரியன் சந்திரன் மயக்கம் இல்லாத புலி குரங்கு நாகம் வசுக்கள் தேவர் அசுரர் எல்லாரும் ஏதும் அயற்சி (சோர்வு) இன்று இன்றி உன்னை அர்ச்சித்தார் பெறுகின்ற அரிய அருளின் சிறப்புக் கண்டு எனக்கும் அருள் வருமா என்ற திகைப்பு ஏதும் இல்லாமல் உன் திருவடிகளை அடைந்து கொண்டேன். செழுமையான சோலை சூழ்ந்த திருப் புன்கூரில் வாழும் ஈசனே!

அருச்சனை புரிந்தார் பெறும் அருள் எல்லையற்றதாக இருத்தலின் திகைப்பு தேவையிலாது போயது. உறுதி பெறவுள்ளதாக வந்தது என்றார், இந்தியாவில் இலங்கையில் உள்ள சிவாலயங்கள் எல்லாம் முன் சொல்லிய இயக்கர் முதல் அசுரர்வரையும் உள்ளவர் பூசித்த பேறுடையதாக உள்ளது. எல்லாத் தலங்களும் இவர்கள் வழிபட்டு உய்ந்த சிறப்பால் உற்றன. 9

**போர்த்த நீள்செவி யாளர் அந்தணர்க்குப் பொழில்கொள் ஆல்நிழற்கீழறம் புரிந்து**
**பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத் தருளி னய்ப்பண்டு பகீரதன் வேண்ட**
**ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த**
**தீர்த்தனேநின்தன் திருவடி அடைந்தேன் செழும்பொழில் திருப்புன்கூர் உளானே.**

சிரசினை போர்க்கும் படி நீண்ட செவி உடையவர் ஒளி நெறியின் தாகம் உடைய அந்தணர்க்கு நன்று நிழல் செய்திட சோலையாகிப் பரந்த ஆலமர நிழலின் கீழாக தருமம் உபதேசித்து அருச்சுனனிற்கு பாசுபதப்படை கொடுத்தருளினாய் முன்னர் பகீரதன் வேண்டிட ஆரவாரத்துடன் வந்து இறங்கிப் பெருவெள்ளமாகப் பரந்த கங்கைஆறு என்னும் பெண்ணை நின் சடைமீது வைத்து மறைத்தருளிய எம்வினை போக்கும் தீர்த்தனே! உன் திருவடியை நான் அடைந்து கொண்டேன் செழுமையான சோலை சூழ்ந்த திருப்புன்கூர் இருக்கும் கடவுளே!

**மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவரில் இருவர் நின்திருக் கோயிலின்வாய்தல்**
**காவ லாளர்என் றேவிய பின்னை ஒருவ நீகரி காடரங்காக**
**மானை நோக்கியோர் மாநடம் மகிழ மணிமு ழாமுழக்க அருள் செய்த**
**தேவ தேவநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.**

மூன்று மதில் உடைய புரங்களை நீ எரித்த அன்று அப்புரத்துள் வாழ்ந்த மூன்று பேரில் இருவரை நினது கோயில் வாய்தலில் காவலராக நிற்கும் படி விடுத்தாய். அதன் பின்னர் யார்க்கும் கடவுளான ஒருவ நீ சுடுகாடு நடனம் புரியும் மேடையாக அமைய அதில் நின்றருளி மான் போலும் பார்வை உடைய சிவகாமி அம்மை ஒரு புறமாக நின்று நின்பெரும் திருக்கூத்தை மகிழ்ந்திட; அந்த மூவரில் எஞ்சிய ஒருவரை அழகிய முரசப்பறை உனது திருக்கூத்திற்கு முழக்கும் படி செய்த தேவாதி தேவனே நின் திருவடி அடைந்தேன்: திருப்புன்கூர் மேவிய சிவலோக நாதனே! 8

**அறிவி னால்மிக்க அறுவகைச் சமயம் அவ்வ வர்க்கங்கே ஆரருள் புரிந்து**
**எறியு மாகடல் இலங்கையர் கோனைத் துலங்க மால்வரைக் கீழ்அடர்திட்டுக்**
**குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது கொடுத்த**
**செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே.**

அறிவினால் மிகுந்த கொள்கை உடைய ஆறு வகைச் சமயங்களை அவ்வாறு உள்ளார்க்கு பெறும் படி பெரும் அருள் புரிந்து: திரை எறியும் பெருங்கடல் சூழ்ந்த இலங்கை நகர் தலைவன் இராவணனை நடுங்கும் படி பெருமலையான கைலைமலைக் கீழாக நெரித்திட்டு உன்னையே குறித்து எழுந்த பாடலின் இனிய இசை கேட்டு மகிழ்ந்து கோலம் மிகுந்த வாளுடன் மூன்று கோடி நாட்கள் வாழும் படி வரங் கொடுத்தருளிய உனது அருளின் செறிவுகண்டு நின்திருவடி அடைந்தேன். செழுமையான சோலை சூழ்ந்த திருப்புன்கூரில் இருக்கும் கடவுளே. 9

**கம்ப மால்களிற் றின்னுரி யானைக் காமற் காய்ந்ததோர் கண்உடை யானைக்**
**செம்பொ னேஒக்குந் திருவரு வானைச் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானை**
**உம்ப ராளியை உமையவள் கோனை ஊரன் வன்றெண்டன் உள்ளத் தால்உகந்**
**தன்பி னுற்சொன்ன அருந்தமிழ் ஐந்தோ டைந்தும் வல்லவர் அருவினை இலரே,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மதம் பொழியும் யானையின் தோல் உரித்துப் போர்த்தருளியவனை; காமனை எரித்தருளிய தொரு கண் உடையவனை செம்பொன்னையே ஒத்த திருவுடைய உருவத்தைக் கொண்டவனை: செழுமையான சோலை சூழ்ந்த திருப்புன்கூரில் உள்ளவனை; தேவர்கட்கு சிங்கம் போன்றவனை; உமையம்மையார் கணவனை; நம்பியாரூரன் வன்றொன்டன்; எனும் நாமங்களுடையவன் மனதால் மகிழ்ந்து அன்பினால் சொன்ன இந்த அருமையான தமிழ் பாடல் பத்தினையும் கற்று மனனம் பண்ண வல்லமை உடையராய் இருப்பவர் கொடிய வினை இலராவார்கள். 1

0

# சாந்த நிலைக்கு மனத்தூய்மையே காரணம். அது பிரமத்தை உணரவைக்கும்

## அழுக்குடைய மனம் ஆரவாரத்தை விரும்பும். அழுக்கிலாத தூய மனம் அமைதியை விரும்பும்.

## சென்ற இதழ் கதா உபநிடதத்தின் தொடர்ச்சி

மனக் கட்டுப்பாடு உடையவரால் உயர்ந்த நிலையை அடையலாமன்றி பொன் புகழ் பூமி என்றும் இவற்றினை விரும்புவார் உயர் நிலைக்குச் செல்ல மாட்டார். கீழே தரப்படும் உபநிடதவாக்கியங்களை நோக்கின் தூய மனமுடையாரது செயலாக சாந்தம் பொறுமை முதலியன இருக்கும். அத்தகையோரே இறைவன் பேரருளுக்கு உரியவர் என வலிஉறுத்தப்படல் காண்க.

இருவர் உடம்பின் உள்ளாக வாழ்கின்றனர், ஒருவர் புத்தியின் உள்ளும் மற்றவர் இருதயத்தின் உள்ளாய பரம ஆகாய வெளியிலும் வாழ்கின்றனர்: இருவரும் தாம் தாம் செய்திடும் செயல்களுக்குரிய உண்மைப் பலன்களின் நலன்களைப் பெற்று இன்புற்றிருக்கின்றனர். பிரமத்தை உணர்ந்து தெரிந்த பெரியோர்கள் அந்த இருவரையும் ஒளியும் நிழலும் என விவரிக்கின்றனர். அதுவுமன்றி ஐந்து அக்கினிகளை நித்தியமும் வளர்த்து ஆகுதி செய்து ஒழுகி வரும் நற்குலத்துத் தோன்றிய அந்தணரும் இவ்வாறு இருவரையும் உணர்ந்து உரைத்துள்ளனர், இவர்களுடன் நாச்சிகேத யாகங்களை மும் முறையாக புரிந்துவருள்ள வரும் அவ்வாறே உணர்ந்து சொல்லியுள்ளனர்.

(இருவர் எனப்படுவோர் ஜீவாத்துமா. தாம் தாம் ஆன ஜீவன்கள்; அடுத்த பரம ஆத்துமா தன்னந்தனியான எவர்க்கும் மேலானது என்பதாகும். இதை அருணகிரியார் தன்னம் தனி நின்றது தான் அறிய என்றமை உணர்க.)

(உண்மைப் பலன்களை என்பது இவ்வுலகில் செய்யப்படும் செயல் யாவிற்கும் ஓர் பலன் உண்டு என்பதாகும். அவரவர் செய்தற்கு அநுபவித்தாக வேண்டும். இவையும் பிரமவித்தைக்குரிய உணர்வுடையோர் கருத்துக்கள்.) 1

நாங்கள் நாச்சிகேத யாகம் எவ்வாறு புரிவதென தெரிந்துள்ளோம். நாச்சிகேத யாகமே யாகம் செய்வோர்க்கு அருளாய கரை சேரும் பாலமாக அமைவது. நாங்கள் அந்த தன்னம் தனியான எதற்கும் மேலான அழிவற்ற பிரமத்தை தெரிந்துள்ளோம். இந்த பிரமத்தை அடையவே அச்சம் அறியாத அருள் கரையைச் சேர விரும்பும் முனிவர்கள் தேடுகின்றனர்.

(பிறப்பு இறப்பு துன்பம் பயம் கவலை என்பது அறியாத இடமே ''அருள் கரை;' எனப்படுவது! அது பிரமத்தை உணர்ந்தார்க்கே உரியது. அதனை அடைதற்காகவே நாச்சிகேத யாகம் புரிவது. அந்த யாகம் துயரம் நிறைந்த மனித வாழ்வில் நின்றும் நீங்கி அருளின் கரைசேர இடையில் இருக்கும் கடக்க முடியாத பற்று என்னும் கடலைத் தாண்டும் பாலம் போல்வது என்பதால் அருளின் அக்கரை சேர்வார்க்கு பாலம் போல்வது என்றான் இயமன்)

ஆத்மா ஓர் தேரில் இருப்பதாகும்; எஜமானுகவும் உடம்பு தேராகவும்தேரைச்செலுத்துவார் புத்தியாகவும்; மனம் தேரை ஈர்க்கும் குதிரைகளின் கடிவாளமாகவும் உளது என்பதை நீ நன்கு அறி.

புலன்கள் குதிரைகளாக உள்ளன என்றும் பொருள் தெருவாக உள்ளன என்றும் பிரமத்தை உணர்ந்தோர் தெரிவிக்கின்றனர். அறிவுடைய பெரியோர் ஆத்மாவை புலன்கள் மனம் இவற்றுடன் கூடிய உடம்புடன் இருந்து ஆநந்திக்கும் பொருளாகச் சொல்கின்றனர்.

புலன்கள்என்பது கண் காது மூக்கு நாக்கு உடம்புஎனஆகும்.பொருள்கள் என்பது இந்தபுலன்களின்பொருளாய் அனுபவிக்கும் கருவிகளாகும் பார்வை சத்தம் பரிசம் சுவை எனதாகும். புலன்களாய் குதிரை இவை பெறும் வழியில் ஈர்த்துச் செல்வன என்பதால் வழிகள் என மொழியப் பட்டது.) 4

புத்தி மனதின் தொடர்புடைய தாதலால் மனம் எப்பொழுதும் வேறு வழிகளில் (பந்த வழிகள்) இழுபட்டுப் போய் விடுகின்றதால் அமைதியிலாத மனம் விரும்பிய வழி புத்தியும் இழுபட்டு விடுகின்றது; அதனால் மனதின் பிடியிலிருந்து விடுபட முடியாது நல்லதை தீயதை உணரமுடியாது தவிக்கின்றது. இந்த நிலையில் புலன்கள் கட்டுப்பாடிலாது வந்து விடுகின்றன. எவ்வாறு எனில் ஓர் வண்டியில் பூட்டிய குதிரைகள் கட்டுக் கடங்காது தம் இட்டப்படி சென்று வண்டிக்குச் சேதம் விளைவிப்பது போலாகும். 5

ஆனால் புத்தி மனதுடன் தொடர்புடையதால் அம்மனம் சாந்தமடைகின்ற போது நல்லது தீயதை உணர்ந்தறியும் வாய்ப்பினைப் பெற்று அதனாலே புலன்கள் கட்டுப்பாடின் கீழ் கொண்டு வரப் பெற்று நன்மைக்கு விளைவாகின்றது. எப்படி எனில் நன்மையான குதிரைகள் பூட்டப் பட்டதேர் போல் இத்தன்மை விளங்கிடும். 6

புத்தி அமைதியிலாத வேகமனமுடைய மனதில் தொடர்பு கொண்டபோது; புத்தி நல்லதை தீயதை உணரமுடியாத ஓர் மந்த நிலைக்குளாகி எப்பொழுதுமே புத்தி அழுக்குடையதாக விளங்கிடும். ஆதலினாலே அழுக்குடைய புத்தியில் தங்கும் ஆத்மா எப்பொழுதுமே தான் அடைய வேண்டிய குறிக்கோளை அடைய மாட்டாது. இதனாலே பூரணப் பொருளாய பிரமத்தை அடைய மாட்டாது. திரும்பத் திரும்பப் பிறவி எடுத்தவாறு இருக்கும்,

(வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க என்னும் திருவாசகம் இங்கு நினைவு கூரல் நன்று.) 7

ஆனால் புத்தி மனத்தின் தொடர்புடையதால் அம்மனம் சாந்தநிலை உற்ற பொழுது நல்லது தீயதை அந்த நிலையில் புத்தி உணர்ந்து தெளிவாகி எப்பொழுதும் வஞ்சம் அற்ற புனித நிலையில் தூய்மை உடன் விளங்கிடும். அப்படியான நிலையில் புத்தியில் இருக்கும் ஆத்மா தான் அடைய வேண்டிய பூரணத்துவத்தை அடைந்து மீண்டும் பிறந்திடாது நல்நிலையை அடைந்து கொள்ளும்.

(அழுக்குடைய மனம் கொலை களவு பொய் வீம்பு முதல் பல குறைகளைப் புரிவதும் அதனால் மீள மீளத் துயரத்திற்குளாகிப் பிறப்பதும் அஃதிலாத தூயமனம் புண்ணியச் செயல்களான தருமம் தூய தவம் இவற்றின் வழி ஒழுகி புனிதமாகி பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப நிலையை அடைகின்றத.) 8

தேரில் ஒரு மனிதன் தனது சாரதியின் புத்தியின் போக்கை உணர்ந்து தானே மனத்தின் கடிவாளங்களை சிக்காராக வைத்திருப்பானே யாகில் அவன் தான் செல்லும் வழியின் முடிவைச் சென்று அடைவான். அந்த எல்லை தான் பிரமவிட்டுணுக்களும் அறியமாட்டாத சிவ சொரூபம். அது மூலமும் முடிவும் இலாதது, 9

(இதனையே ஈறு கூறுதற்கரிய பெரிய சுவாமியாய் இருந்தது அன்றி ஏதும் வேறு இயம்பல் இன்றி ஒருதானுய் யாவுமாய் மனம் கடந்த மோனவீடு அடைந்து ஒடுங்க யான் அவா அடங்க என்று பெறுவேனோ என முருகனைக் கேட்கின்றார் அருணகிரியார். அவர்பாடிய திருப்புகழ் எல்லாம் தூய உபநிடதக் கருத்துக்களாகும். ஆர் இதை நம்புவார். அதனால் தான் தாயுமானவரும் ஐயா அருணகிரி அப்பா உனைப் போல் மெய்யாக ஓர் சொல் விளம்பினர் ஆர் என கூறுகிறார்,)

# சந்திரதீபத்தை வாசிக்க வேண்டாம் எனத் தீர்மானம்.

நல்லூர் இந்து இளைஞர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று சில நாள் முன்பு நிகழ்ந்தது, அப்பொழுது தேநீர் வடை இவை அருந்திய பின் ஒரு சந்திரதீபம் என்னும் பத்திரிகை மிகு மோசமான நிலையில் சமயம் வளர்க்கும் சுவாமிகளையும் அம்மையார்களையும் சமய வளர்ச்சிக்கு பொருள் உதவும் வள்ளல்களையும் கண்டிக்கின்றது. இப்பத்திரிகையைத் தடை செய்யும் படி நாம் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என ஒரு அங்கத்தவர் கோரினர்,

நான் அப்போது அவரை நோக்கி நீங்கள் அப்பத்திரிகையை வாசிக்கின்றீரோ எனக் கேட்டேன். அவர் ஓம் நான் வாசிக்கின்றேன் என்றார். நான் சொன்னேன் சிலர் அப்பத்திரிகையை தாம் கையாலும் தொடுவதில்லை எனச் சொல்லி இருக்கிறார். ஆதலினால், நாமும் அப்பத்திரிகையை வாசிப்பதில்லை என தீர்மானித்தால் அத்துடன் விடயம் சரியாகும் என்றேன்: தலைவரும் எனது ஆலோசனையை சரி என ஏற்றுக் கொண்டதால் அத்துடன் சந்திரதீபம் பற்றிய சர்ச்சை நிறுத்தப்பட்டது. [தகவல் திரு: சண்முகலிங்கம்]

## கன்னியரும் காளையரும் கடிந்து கொண்டனர்

இலங்கையில் ஒரு தலை சிறந்த சமையப் பத்திரிகை வேண்டுமென விரும்பிய இலக்கண சுவாமிகள் விருப்பத்திற்கிணங்க ஆரம்பிக்கப்பட்ட ஈழ நாடு துர்க்கை கோயிலைப்பற்றி ஓர் செய்தியில் துர்க்கை அம்மனை வழிபட்டால் மணவாளன் (வரன்) வலு சீக்கிரத்தில் வந்தடைவான் என வெளியிட்டது. நமக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. ஏனெனில் ஓர் வரன் தேடி ஏழு செருப்புத் தேயும் என்ற பழமொழி உண்டு. அதனாலே எமது யாழ்ப்பாண மக்களுக்கு இது ஒரு பெருவரப்பிரசாதம்,

அடுத்து வியாபாரிகட்கு ஏராளமான பொருளை வளங்கினால் துர்க்கை வரமாக அருள்வாள் என்றதும் மட்டற்ற மகிழ்ச்சியானது. ஏன் என்றால் 2 ரூபாவிற்கு ஆறு மாதம் முன் வாங்கின அதே புளியை 8 ரூபா விற்கு விற்கப் பண்ணி துர்க்கை எவ்வளவு அனுக்கிரகம் புரிகிறாள் மிகவும் நன்று.

எம் யாழ்ப்பாண நாட்டில் பல குடும்பங்களிலும் 4 5 7 8 என்ற கணக்கில் குமர்ப் பெண்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சென்று வழிபடப் போய் தொண்டர் படையில் சேர்ந்தால் துர்க்கையின் அநுக்கிரகத்துடன் அங்குள்ள ஆண் தொண்டர் படையுடன் ஏதோ சில சச்சரவு பட்டதாகச் செய்திகள் கிடைத்தன. எனினும் எவ்வாறாயினும் வரன் கிடைத்தால் மிகவும் நல்லது.

## காரியதரிசியே தலைவரும் பொருளாளருமாவர்

சென்ற குமரகுருபரன் பத்திரிகையில் (தென் இந்தியப் பிரசுரம்) காரியதரிசியே தலைவர் என்ற படி ஓர் செய்தி உண்டு. அதில் திருக்கேதீச்சரத்திற்கு பண உதவி செய்வோர் திரு நமசிவாயம் தலைவர் திருக்கேதீச்சர திருப்பணிச்சபை என்று விலாசமிட்டு அனுப்புமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவு ஓர் பெரும் நிலையை காரியதரிசி அவர்கட்கு வருவித்த திருக்கேதீச்சர திருப்பணிச்சபையார்க்கு எமது மனமுவந்த வணக்கங்கள். ஆனால் உண்மையில் திருக்கேதீச்சர சபை தேவையில்லை. அது தனித்த ஒருவர் முயற்ச்சி காணும் என நாமும் சொல்லலாமோ?

காரியதரிசி ஓர் வீடு திருக்கேதீச்சரத்தில் கட்டினார் என்றும் அதற்கு கோயில் கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்யும் ஒருவர் இவர்களது வீடு கட்டும் வேலைகளை மேற்பார்வை செய்தாரென்றும் தற்போது அவர் தற்காலிகமாக வேலையில் இருந்து நீக்கப்பட்டார் என்றும் செய்திகள் கிடைக்கின்றன. திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபைத்தலைவர் [illegible] அவர்கள் திருக்கேதீச்சரத்தில் சமீபகாலத்தில் [illegible] செயல்கள் பற்றி அதன் உண்மை நிலைகளை சைவஉலகிற்கு வெளிப்படுத்திக் காண்பித்தால் திருக்கேதீஸ்வர திருப்பணி வளர்ச்சிக்கு பெரும் பணியாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற கும்பாபிசேகம்

வண்ணை கதிர் வேலாயுத சுவாமி கோவில் முன்பு செட்டிமாரின் பரிபாலனத்தில் இருந்தது. செட்டிமார் யாவரும் இங்கு விட்டுப் போயினர். பின்னர் கோவில் நிர்வாகம் ஓர் சபையிடம் ஒப்படைக்கப் பட்டது: இச்சபையில் பல சட்ட ஆறிஞர்கள் ஆசிரியர் உட்பட பலரும் அங்கம் வகிக்கின்றனர்.

சில கருமங்களில் பொது அறிவைப் பிரயோகித்து எவரும் ஒவ்வொரு கருமத்தினையும் நன்கு தெரிந்து தெளிந்து செய்யலாம். இதற்கு விசேட கல்வி அறிவோ அன்றி ஆலோசனையோ வேண்டியதில்லை.

இந்தக் கோவிலில் முன்பிருந்த மூல மூர்த்தி வேலாகும்: அதை வலாஸ்தாபனம் செய்து பின்னர் அதை அகற்றி வேறு மூர்த்தி அதாவது முருகன் உருவச் சிலை தாபிப்பதென்றால் முதற்கண் அந்த கோவிலை தாபித்த செட்டிமாரின் உள்ளப் பாங்கிற்கும் நம்பிக்கைக்கும் முரணுகவே செயல் படுகின்றனர், அது துரோகமான செயல்.

அடுத்து விசேட அறிவில் நாம் சிந்திக்கும் போது எந்த ஒரு கோவிலிலும் மூல மூர்த்தியாய் இருப்பதை அகற்றி வேறு வடிவான மூர்த்தியை மறுதரம் செய்யும் கும்பாபிஷேகத்தில் செய்தல் தகாது. ஏனெனில் முன்பிருந்த மூர்த்தியில் பிராணப் பிரதிட்டையாகச் செய்யப்பட்ட திருவருள் முதலை, அதைவிடுத்து இன்னெரு உருவத்தில் தாபிப்பது பாவமான செயல்:

இது ஒருவர்க்குரிய உயிரைப் பிரித்தெடுத்து இன்னுமொருவரின் உடலில் பிரவேசித்திட வைத்தது போலாகும்: வேல் வேறு முருகன் வேறு: முருகனுடைய கைப்படையாக அமைந்தது வேல்.

வேல் சத்தியின் வடிவமாவது. வேலைப் பற்றி கல்லாடர் சொல்லும் போது அது உமையம்மையின் சத்தியாகும் என "தற்பெயர் புணர்த்திக் கற்பினெடு கொடுத்த அமையாவென்றி அரத்த நெடுவேலோய்" என முருகனும் வேலும் வேறு வேறு தெய்வமாகின்றது தெளிவாகும். வேல் முருகன் கை ஆயுதம் ஆனாலும் அதுவும் தெய்வமாகும் என்பதை கந்த புராணம் தெளிவுபடுத்துகின்றது. வீரவாகு தேவர் முதலிய வீரரை எல்லாம் 3ம் நாள் யுத்தத்தில் சூரனுடைய மகன் பானுகோபன் மாயை என்னும் பாசப் படையால் கட்டி ஒருவரும் சென்று அணுகமுடியாத புற ஆழிக் கடலில் போட்டிடுகின்றான். இவரின் நிலை அறிந்த ஆறுமுகப் பெருமான் தமது திருக்கையில் அமர்ந்த வேல் பெருமானை அவரை எல்லாம் கட்டு நீக்கி அழைத்து வருமாறு பணிக்கின்றார்:

எம்பெருமான் வேல் புறப்பட்டுச் செல்கின்றார். எங்கும் ஒரே சோதி மயமாக விரிகின்றார். அவரால் பரப்பிய ஒளியால் அசுரரது வஞ்சனை கபடம் கொலை முதலிய பாதகங்கள் அத்தனையும் உடைபட்டுச் சிதைவாகின்றது, இன் நிலையில் வேல் பெருமான் புறவாழிச் சமுத்திரத்தை அடைகின்றார்,

எம்பெருமான் வேல் புறவாழிச் சமுத்திரத்தைச் சேர்தலும்; அங்கு அதுகாறும் மாயப் படையால் மயங்கி இறந்தால் போல் உணர்வதற்கு இருந்த வீரவாகு தேவர் முதல் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். அசுரத்தன்மை ஒழிந்தது: அருள் சிறந்தது: அன்பு பெருகியது: கவலைகள் சிதைந்தன. கருணையின் கடல் பொங்கி எழுந்தது.

இதனைக் கந்தபுராணம் — அசுரர் மாயை அழிந்தது; பாவத்தின் திரட்சி ஒழிந்தது: வேதங்கள் யாவும் தாமாக எழுந்து பாடின; பூமி என்னும் தெய்வம் பெருமகிழ் சிறந்தாள்; தருமத்தின் தெய்வம் கூத்தாடியது; முழுப்புவனங்களும் ஆர்த்தன; இதை கண்ட முனிவர் தேவர் யாரும் அருள் சிறந்து பரவசமாகி தேன் சொரியும் மலர்களைச் சொரிந்தனர்:

எங்கும் அமைதி சாந்தம் நிலவியது. உணர்ச்சி பெற்று எழுந்த வீரவாகு தேவரும் தம்பிமாரும் பூதகணங்களும் அதிபர்களும் யாவரும் வான் மீது எம் பெருமான் வேல் வருவதைக் காண்கின்றனர்: கண்ட போது எம்மால் சொல்லரும் ஆநந்தம் உள்ளத்தில் பொங்கிட வேல் பெருமானைப் பல முறையும் பணிந்து போற்றி உச்சியில் கூப்பிய கையராகி எம்பெருமான் வேலை எதிர் கொண்டு அவர் புறமாக சூழ்ந்து கொண்டனர். அந்நேரத்தில் அசுரரின் மாயையில் தாழ்ந்து உணர்ச்சி அழிந்து போனதும்; புறவாழிக் கடலில் தமது உடல்போடப்பட்டதும் எம்பெருமானது வேலின் வருகையால் மீள உணர்வு பெற்று எழுந்ததும் பிற வரலாறு யாவும் தன் உள்ளத்து உற்ற மிக ஆழமான முதிய அறிவால் உணர்ந்து தேறி வீரவாகு தேவர் எம் பெருமான் வேலை நோக்கிச் சொல்கின்றார்.

முடிவு காண்பரிய சோதி மயமானி ஒளியின் சீரினல் முன் மூன்று பின் மூன்று முகமாக ஆறுமுகம் கொண்டதால் எம்பிரான் சிவனுடைய நெற்றிக் கண்ணில் நின்றும் தோற்றிய தன்மையால் அசுரர்குலம் ஒழித்தருளும் சத்தியாவிர் நீர் என்ற பாடல் பல பெற்றவகை தனியன வேற்கடவுளே என அப்பனே உம்மை கந்தன் என்னும் படியாக இங்கு கண்டு எம் மனக் கவலை தீர்த்தோம் எனப் போற்றினர் என கந்தபுராணம் கூறுகின்றது.

வேலை வணங்குதல் மனக்கவலை போக்கிடும். வேலுக்கு தனிக்கோயில் எடுக்கலாம். அது தவறில்லை. கல்லாடம் கந்தபுராணம் கற்றறிந்த ஞானிகள் யாவரும் ஆறுமுகப் பெருமானைப் போன்றே வேற்பெருமானையும் போற்றுகின்றனர்,

மனதில் சஞ்சலத்தை வருவிப்பவர் அசுரர். நோயை உடம்பில் வருவிப்பவர் அசுரர். ஆதலின் இவரை அடியோடு அழித்து அருள் புரிவது வேல் பெருமானுக்கும் இதனை கருத்தில் நினைந்துருகி கைகூப்பும் மெய் அடியார் வருத்த மெலாம் தீர்க்கும் வடிவேல் திருத்தலம் நல்லூர் என்றும் வேலை மயில் மீது எழுந்தருளச் செய்து திருவுலா வருவது நன்று என்பதை தூவி மயில் ஏறும் வேலைத் துதித்து கொள்ளடா என்றும் மனக்கவலை ஒழித்திட ஐயன் கைவேல் அன்றி மருந்தும் உண்டோ என்றும் யோகசுவாமிகள் போற்றி உள்ளார்கள்.

அடுத்து கதிரேசன் கோவில் மேற்கு புறமதில் இன்னும் கட்டியாகவில்லை. அந்த மதில் இடத்தில் பெரிய ஒரு [illegible] இருக்கின்றது: இப்படியான நிலையில் கும்பாஷேகத்தை அவசரம் அவசரமாக நிர்வாகம் செய்தையிட்டு பலரும் மனம் வருந்துகின்றனர்:

ஆகமங்களின் நுட்ப அறிவுத் திறனே அல்லது பொது அறிவுத்திறனே ஏதும் இல்லாது அவர் செய்யலாம் என்றார் இவர் செய்யலாம் என்றார் என்று இது போன்ற பேதைத் தனமான செயலை எம்நாட்டில் நீடிக்க விடாது பாதுகாப்பது நமது சைவமக்கள் கடமை.

அடுத்து சங்காபிஷேகம் என்ற மண்டலாபிசேகம் ஒரு காணிவல் என்றே சொல்லலாம். அது மட்டுப் படுத்த முடியாத அலறலாகவே இருந்தது. அது பேதைச் செயலின் செயல் செய்வார் முன் பின் யோசியாது நடப்பபார் என்ற திருக்குறளுக்குத் தக்க எடுத்துக் காட்டாக இருந்தது.

# சாவகச்சேரி சிவன் கோவிலில்
## அர்ச்சனைக்கு இரட்டிப்புப் பணம்.

ஐயா!

தங்களது பத்திரிகை சாவகச்சேரி சிவன் கோவிலில் வாசிக்கும் பாக்கியம் கிடைத்தது அதிலே தேவாரங்களின் பதவுரையும் சில அரும் பெரும் தத்துவக் கருத்துக்களும் ஐயர்மாரின் குறைகளையும் எழுதி இருந்ததை வாசித்தேன். நல்லையருக்கு ஐயர்மாரில் வெறுப்பு போல் அதுதான் பத்திரிகையில் எழுதினர் என்று கும்மாளம் போட்ட வர்களில் நானும் ஒருவன். அடுத்து அடுத்து இந்த சந்திரதீபத்தை தொடர்ந்து வாசித்து அதன் பணியை நன்கு அறிந்தேன்: சைவ உலகுக்கு பெரும்பணி புரிகின்றது என்பதை நுணுவில் வாசிகசாலை உட்பட அனைவரும் போற்றுகின்றோம்,

இங்கே எந்த சுவாமிக்கு அர்ச்சனை செய்ய விரும்பினாலும் ரிக்கற் விற்பனை செய்யும் வயதானவரிடம் 1 ரூபா ரிக்கற் எடுக்க வேண்டும்: ஒருநாள் நான் கிரகத்துக்கும் சிவனுக்கும் அர்ச்சனை செய்ய விரும்பி விற்பனையாளரை வினவிய போது ரூ 10 கட்டும்படி கூறினர்: அதன்படி பணத்தைக் கட்டி ரிக்கற்றைப் பெற்று ஐயரிடம் அர்ச்சனை பொருட்களையும் ரிக்கற்றையும் கொடுத்தேன். வேறு ஆட்களும் நின்றார்கள் அர்ச்சனைகள் நடை பெறுகின்றன. அப்போது நான் ஐயரிடம் எனது அர்ச்சனை பற்றி நினைவூட்டினேன். ரிக்கற்காசு கோவிலுக் கல்லாமல் எனக்கு சொற்பமும் கிடையாது என்று சினந்தார்: நான் அங்கு நின்றவர்கள் செய்த விதத்தையும் ஐயர் கூறியதையும் புரிந்து கொண்டு 9 கிரகத்துக்கும் எவ்வளவு என்று கேட்டேன். ரூ 5 வெற்றிலையில் தரும் படி கூறினர்: நான் அதன்படியே கொடுத்தேன். அப்போது தேங்காய் உடைக்காமலே அர்ச்சனை செய்து தீர்த்தம் தெளித்தார். அர்ச்சனை முடிந்தால் இதில் நிற்கக்கூடாது என்று முணுமுணுத்தார்: நாம் விலகி நின்றோம். சிவபூசைக்கு ஒருபடி அரிசியும் கொடுத்திருந்தேன் அர்ச்சனை முடிந்தபின் விபூதி சந்தனம் தந்தார். ஆனல் பிரசாதம் தரவில்லை: பின் படி அரிசிக்கு 1 சுண்டு அரிசியல் அமுது தந்து (4 கட்டி) எல்லாம் சரி கொண்டு விலகும் என்றார். நான் கிளாக்கரிடம் சென்று விடயத்தைக் கூறினேன்; கிளாக்கர் ஐயரிடம் ஏதோ கேட்ட போது நீர் உம்முடைய வேலையைப் பாரும் என்று ஐயர் கோசமிட்டார். என்னதைச் செய்வது என்று நானும் திரும்பிவிட்டேன்.

பின்பு ஒருநாள் அன்று செவ்வாய்க் கிழமை கோவிலுக்கு போனேன். அன்று ஆலயம் விழாக்கோலம் பூண்டிருந்தது. விசாரித்ததில் இலட்சா அர்ச்சனை என்று அறிந்தேன் சிறிது நேரத்தில் ஒலிபெருக்கியில் சினிமாப் பாட்டு ஒன்று, ஒலிபரப்பானது தொடர்ந்து 3,4 பாட்டுகள் ஒலிபரப்பான போது ஒருவர் வந்து சினிமாப் பாட்டு போட வேண்டாம் என்று தடுத்து விட்டார். சினிமாப் பாட்டில் லயித்து கொண்டிருந்த ஐயர்மாருக்கு மீண்டும் ஒலிபெருக்கியில் பாட்டு கேளாதபடியால் மடப்பள்ளியிற்குள்ளே "அழகி ஒருத்தி இளநீர் விற்கிற கொழும்பு வீதியிலே" எனபாடி பைலாபோட்டார்கள். நான் கோவிலுக்கு வந்தேனு சினிமாத்தியேட்டருக்கு வந்தேனு என்று ஒரு கணம் சிந்தித்தேன் —;அன்பன்;— க.பரமசிவம் நுணுவில்.

# கொடியேற்றக்குருக்கள் பொன்னுடைபோர்வை.

கொடியேற்றம் செய்யும் குருக்கள் தனது கொடியேற்றி இருக்கும் கால எல்லையில் வேறு எச்செயலும் செய்யக் கூடாது அதாவது கொடிமரப் பூசையாக பூசை இவற்றுடன் நின்று அக்கால எல்லைவரையும் தவ வாழ்க்கையாக இருக்கவேண்டும் என அறிஞர் ஆகமமூலம் சொல்லியுள்ளனர். ஆனல் காரைநகரில்; உள்ள கருங்காலி முருகமூர்த்தி கோவிலில் கொடியேற்றிய குருக்கள் அக்காலத்தில் ஒருவர்க்குற்ற பாராட்டு விழாவில் பங்கு கொண்டு பொன்னுடை போர்த்து கௌரவித்தார் எனவும் அச்செயலின் புகைப்படம் வீரகேசரியில் விளம்பரமாயது எனவும் சில அன்பர் செய்தி தெரிவிக்கின்றனர்.

சம்பந்தர் தவம் பணி குலச்சிறை என்றும் அருணகிரியார் மாதவம் எண்ணுமல் பணிவார் தீநரகல் சேர்வார் என்றும் சொல்லி உள்ளனர்.

இங்கிருந்து 20000 ரூபா வரை பக்குவமாக முருகன் அருளால் கொண்டு போய்ச் சேர்ந்த திருவாீளர் திருமுருககிருபானந்த வாரியாரோ அல்லது காஞ்சி பெரியவாள் என்று நிறைந்த ருேசாப்பூ மாலையுடன் கல்கிப் பத்திரிகையின் முகப்புப்பட பெரியவாளாகக் காணப்படும் காமகோடி பீடாதிபதியோ தவம் பணிதல் மாதவம் எணுமல் பணிதல் என்றதற்கு ஓர் விளக்கம் தந்தால் நல்லது.

# உடுப்பிட்டி வீரபத்திரகோயில்மண்டலாபிஷேகம்

45 தினங்களும் உடுவில் இருக்கும் ஓர் குருக்கள் வந்து முறைப்படி அபிஷேகம் நடாத்திச் சென்றார், 45 வது நாளாகிய மண்டலாபிஷேக தினத்தன்று வீரபத்திரருக்கு (மூலஸ்தானம்) ஓர் குருக்களும் பிள்ளையார் சுப்பிரமணியருக்கு உடுவிலைச் சேர்ந்த ஓர் குருக்களும் அபிஷேகம் நடாத்தினர். அபிஷேகம் முடிந்த உடன் ஆசீர்வாதம் இடம் பெற்றது.

முதல் பிள்ளையார் சுப்பிரமணியர் உபயகாரர்கள் குருக்களுக்கு தெர்ப்பை கழற்றி தெட்சனை வைத்து கொடுத்தனா. உடன் குருக்கள் காசை சுழற்றி எறிந்தார். தனக்கு 50 ரூபா வீதம் இரண்டிற்கும் [பிள்ளையார் சுப்பிரமணியர்] 100 தரும் படியும் [illegible]க்கு 30 வீதம் 60 தரும் படியும் கேட்டார் நாங்கள் கொடுக்காததால் குருக்கள் சாபம் இட்டார்.

[தகவல் ச. சின்னத்துரை ஆசிரியர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தில்இன்றுஏமாற்றுவோரும் ஏமாற்றப்படுவோரும்பெருகுகின்றனர்.

## கருத்துணராத மந்திர உச்சரிப்பு, பதத்தின் பிரிவு, வர்ணநிலை விளங்காது மொழிதல், தீயவழி ஈட்டும் பொருள் பாவனை, புவன அதிபர்கட்கு முறையான வணக்கமிலாமை, சத்திகளை தவறுன வழியில் வழிபடல், இவையாவும் எமது சைவக்கோவிலில் பெருமளவு நிகழ்கின்றன. இதனுல் பாவமே உலகில் பெருகும். புண்ணியம் குன்றும்! காரநகர் குருக்களின் கருத்து.

எமது சைவ நெறியில் கருமம் (கிரியை) செய்யும் வகையில் ஆறுஅத்துவாமார்க்கங்கள் உள. இந்த ஆறு அத்து வாக்களினுலுமே எந்த இடத்தில் உள்ள எல்லாக் கோயிலிலும் நடை முறைகள் இருப்பன.

இந்த அத்துவாக்கள் ஆறும் மந்திரம் பதம் வர்ணம் புவனம் தத்துவம் பஞ்சகலை எனப்படுவன. இவை அந்த அந்த வகையில் வைத்து அந்த அந்த வழியாக செயல் படும் முறை ஒழுகினுல் புண்ணியம் பெருகும் பாவம் நீங்கும். உலக வாழ்வு சிறப்புறும். செய்வாரும் செய்விப்பாரும் சிவாநுபூதி மான்களாக விளங்குவார். இந்த வகையான அத்துவாமார்க்கம் பற்றிய அறிவு இன்று கொடியேற்றம் செய்யும் அந்தணர் குருமார்க்கு விளங்குமோ எனக்குத் தெரியாது.

அத்துவா என்பது தத்துவத்தின் வழிச் சார்ந்தது. எமது உடம்பில் 96 தத்துவங்கள் உள்ளன. இதன் இயல்பு மண்ணை ஆதியாக் கொண்டது. அதனுலே தான் எந்த கிரியை ஆரம்பத்திலும் மண் எடுத்தல் என்னும் கிரியை நடைபெறும். இதன் இயல்பெல்லாம் கொடியேற்றின களைப்புத்திர வேண்டி; வேண்டின காசையும் கொண்டு மனைவி மக்கள் வேறு கூட்டாளிகளுடன் சினிமா கொட்டகையில் இளைப்பாறிக் கொண்டாடி நேரம் போனுல் ராக்சி பிடித்து வீடு சேரும் ஐயமாருக்கு விளங்குமோ தெரியாது,

இன்றைய பிராமண சமுதாயம் பெரும் பாலும் சினிமாவில் கதை வசனம் நடிப்பு டைரைக்சன் இவை பற்றிய விமர்சனங்களில் அல்லது கால் சட்டைக்கு எந்தக் கடையில் திறமான துணி இருக்கின்றது. ஆரைப் பிடித்தால் சீரான விலையில் எடுக்கலாம் அல்லது வானெலிப் பெட்டி ஸ்கூட்டர் இவை போன்ற இயந்திரக் கருவிகளின் இயக்கமுறை நன்கு தெரியும். ஆரும்அவர்களிடம் அத்துவா என்றுல் கொடி மரத்தில் தொத்தி ஏறுவதோ என நினைப்பர்.

ஏன் என்றுல் கடவுள் என்ற பொருள் ஒன்று உண்டு என நினைக்கின்றதும் அதை அடைதல் பெரிதானது என நினைந்து அதன் வழிதன் குல நெறிப்படி ஒழுகுவாரான ஒரு பிராமணரை எம் யாழ்ப்பாணத்தில் காண்பது அரிதிலும் அரிது.

உண்மையாக ஒருவரின் குணம் செயல் பேச்சு நடத்தை இவற்றைக் கொண்டு நன்றுடன் அவர் குறிக்கோளை வாழ்வை நாம் நிர்ணயிக்கலாம். உதாரணமாக மேடையில் தன்னை உலகம் மதிக்க நின்று பட்டம் பெற்று பொன்னுடை போர்த்து கௌரவிக்கப் படும் எந்த பெண்ணின் நடத்தை கற்பு நெறியின் புனிதம் பற்றி நாம் சந்தேகிப்பதில் ஏதும் தவறில்லை என்பது உறுதி. இன்று மேடை ஏறிய பல பெண்கள் உண்மை யிலாத பல பொய் வதந்திகளைப் பரப்புகின்றனர், இவர்கட்கு ஆதரவாக வில் இசைக்குளுவில் கோமாளியான பிராமணரும் சேர்ந்து பேசுகின்றனர். இவர்களது போக்கைக் கண்டால் சைவம் பாவிகள் பொய்யர் கையில் உள்ளது என நாம் நினைத்தால் தவறில்லை

இதே போன்று பிராமணரது நடத்தையில் ஒழுக்கத்தைக் கவனித்தால் அது இல்லாத பொழுது இவர் இப்படியும் நடப்பார் தானே என சந்தேகிக்கலாம் அது தவறில்லை.

கோயில் பூசை ஒழுங்குகள் முன் தொட்டு நீதியின் கட்டுப்பாட்டில் உள்ளது. உதாரணமாக சுவாமிக்கு ஒரு காலத்திற்குரிய பூசை முடிந்து திரையிடப் பட்டால் பின்னர் அடுத்த காலத்தில் தான் திரை நீக்கம் செய்து அர்ச்சனை செய்ய வேண்டும். அது இல்லாமல் திரையிட்டபின் திரை நீக்கி சிலருக்கு அர்ச்சனை செய்து கொடுப்பதாயின் அத்தகைய அந்தணரதோ எஜமானதோ நன்னடைத்தையில் நாம் சந்தேகிக்க வேண்டி நேரிடும்.

சைவத்தில் மிக முக்கிய மானது ஒழுங்கும் கட்டுப் பாடும், யோக சுவாமி அடிக்கடி சொல்வர் கடவுள் வந்தாலும் கட்டுப்பாடு நீங்கக் கூடாது. இதனை ஊன்றிச் சிந்தித்தால் மேற்கூறிய அத்துவாமார்க்கங்களின் நியதியில் உண்மைக் குரிய வழி பேணல் அவசியம் என்பது புலப்படும். அத்துவா மார்க்கங்களில் உண்மைக்குரிய வழி பேணப்பட்டால் அதன் பலன் புண்ணியமாக மாறி செய்வார் செய்விப்பாரது வாழ்வில் சுபிட்சத்திற் குரிய நிலைகள் காணப்படும். இத்தகையோரது வாழ்வில் அன்பு தருமம் சாந்தம் முதலிய நற்பண்புகள் காணப்படும். அத்து வாமார்க்கங்களை பிழையான வழி நடத்துவார் அல்லது நடத்த உடைந்தையாக இருப்பாரது வாழ்வில் பொய் களவு சண்டை பகமை முதலிய தீங்குகள் இருக்கும்.

ஆதலினுலே தான் எமது சைவ நெறியில் நாம் அடிக்கடி நமது கோயில்களில் கிரியைகளை ஒழுங்காகச் செய்யுங்கள். ஏமாற்றம் வேண்டாம். ஒலிபெருக்கி பிரசாரம் போதனை முதலிய வெருளித்தனங்கள் வேண்டாம் என்றேம். ஏனெனில் இத்தகைய செயல் அத்துவாமார்க்கச் செயலை முழுவதும் பொய்யாக்கிவிடும். திருஞானசம்பந்தர் ஒருதேவாரத்து இந்த வாக்கியத்தை தெரிவிக்கின்றுர் அதுதான்.

## துதி தூபமொடு தீபம் மலி வாய்மை

என்றதாகும். தூபம் தீபம் துதிகள் மலிவன வாய்மையதனுல் எனப்படுவதை நன்கு நாம் உணர வேண்டும்.

உண்மையாக இதை கபடமிலாது விலாசம் பெறும் நோக்கமிலாது சிந்திப்போம் எனில் அத்துவா மார்க்கக் கிரியைகளில் அதற்குரிய உண்மையின் நியதி இருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

வாய்மை அதனுல் தூபமும் தீபமும் துதியும் அர்ச்சனையும் நடைபெற வேண்டும் என்றுல் எந்தக் கோவிலில் இது காணலாம் என்ற அளவிற்கு நம் கோவில்களில் நெறிகள் தலை தடுமாறி விட்டன. இந்த நிலையில் இவை ஒழுங்குடன் நடை பெறல் தான் உண்மை வழிபாடு எனச் சொல்ல எந்த சைவ சபைக் கழகம் திருப்பணிச்சபை பிரசாரகர் இருக்கின்றனர். இதனுலே நம் சமய நிலை வருத்தக்க நிலையில் வந்து; இன்னமும் வழுவிப்போய் சைவக் கிரியைகள் பொதுவாக எல்லாக் கோவிலிலும் பாவத்தின் பெருக்கமாக வந்து விட்டது.

நான் கண்டபடி எமது நாட்டில் வாழும் பல் வேறு மதத்தவரில் சைவராய் இருக்கப் பட்டவர் தமது சமயக் கிரியைகளுக்காக தமது சொத்தில் பெருமளவு பணம் செலவழிக்கின்றனர், இந்தச் செலவினங்கள் யாவும் வீம்புக்கும் வேடிக்கைக்குமாக செலவிடப் படுவனே அன்றி தூய்மையசன வழி எங்கேனும் ஒரு கிரியை ஒழுங்கான முறை காணப்படுவது அரிதாகி விட்டது.

பல தடவை மாவை ஆதினம் திரு. சண்முகநாதக் குருக்கள் எம்மிடம் நேரிலும் கடித மூலமும் இன்று எமது சைவநெறியில் ஏமாற்றுவோனும் ஏமாளியுமாக வந்து கொண்டது என்பார். பிராமணர் பெரும்பாலும் ஏமாற்றுவோராகவும் இவர்க்கு அநுசரணையாக பிரசாரமும் உண்டு. அதனுலே ஏமாளிகளாகும் பொதுமக்கள் இவர்களது ஏமாற்றங்களை நம்பி மோசம் போகின்றுர்கள். ஏமாற்றக்காரரது சதிவலையில் பொதுமக்கள் அகப்பட்டு வீம்பாலும் வீண்வேடிக்கைகளாலும் நம் வழிபாட்டு முறைகளின் தூய்மைகளைக் கெடுத்துக் கொண்டனர்.

அபசாரச் செயலைக் கூசாமல் செய்து பழியும் பாவமும் பெருக்கும் பிராமணர் பிரசாரகரது அநர்த்தங்களை நன்மை உடையது நல்லது என விபரமறியாத பொதுமக்கள் நம்பி அவரது புறக் கோலத்தாலும்ப் பேச்சின் வசீகரத்தாலும் எடுபட்டு அவர்களை நம்பி பொருளும் கொடுத்து படு மோசமான வழி ஏமாற்றப் படுதலால் உண்மை உடையாரது செயல்கள் பொது மக்களால் விரும்பப்படாது போகின்றது.

இந்த அபசாரங்களை சைவ நெறியின் சீலம் உணராத அரசியல் பாராளுமன்ற அங்கத்தவர் இடைப்புகுந்து பிராமணர் பலரை தமது அரிசியல் செல்வாக்கை மிகைப் படுத்துவதற்காக தம் இட்டப்படி நடக்கச் செய்திட; இதனுலே தவறுன வழி கிரியை செய்வார்க்கு தமது இட்டப் படி நடந்திட வாய்ப்பு வந்தது. அரசியல் வாதிகள் கோயிலில் மக்கள் விரும்பியதைச் செய்ய வாய்ப்பழித்திட ஆகம நெறிகள் தடம் புரண்டு போயின.

இன்று எமது சைவ நெறியின் நிலையை தண்டவாளத்தை விடுத்து தடம் புரண்ட ஓர் றெயிலின் நிலைக்கே ஒப்பிடலாம். எல்லாக் கோயிலிலும் பொதுவாக கருமங்களை ஏமாற்ற முறையாகவே செய்கின்றுர்கள் என்பதை பல தடவை நம் தீபத்தில் தகக ஆதாரத்துடன் காண்பித்தோம். இதைக் கண்டு தாம் விடும் பிழையை ஏற்றுத் திருந்தினுல் அது கௌரவக்குறைவுஎனக் கருதிய பலர் தாங்கள் நல்லவர் என்றும் நான் பழி சுமத்துகிறேன் என்றும் என் பத்திரிகையைப் பாராமல் விட வேண்டும் எனவும் பிரசாரம் செய்கின்றனர்.

இந்த தவறுன வழி நடப்பவரிடம் பேச்சு வன்மை மட்டும் உண்டு. வேறு எதுவுமே இல்லை. ஆதலால் பிழையான வழி நடந்து கொண்டு எம் பத்திரியைப் பரிகசிக் கின்றனர். இவர்கள் பரிகசித்திட வேண்டி வரும் காரணம் இவர்கள் கோயில் கிரியைகளில் பெரும் ஏமாற்றம் பொய் சொல்லி வந்த பாவத்தின் பெருக்கமே! என்பதை எல்லா மக்களும் உணர்ந்தால் நன்று.

ஆதலினுலே பாவம் உலகில் எவ்வாறு வந்து அடைகின்றது என்பதை உங்கட்குத் தெரிவித்திட கீழே காரைநகரைச் சேர்ந்த சோமசுந்தரக்குருக்கள் தந்துதவிய சிலவார்த்தைகளைகீழேகாண்கின்றீர்கள்.

### 1. மந்திராத்துவா

மந்திரங்களைக் கருத்துணராமல் படிப்பது மந்திராத்துவா வழியாக நேரும் பாவமாகும.

### 2. பதாத்துவா

சொற்களை முறையாகப் பிரிக்சத் தெரியாமல் பிழை படப் பிரித்துச் சொல்லுவதால் வருவது பதாத்துவாவினுல் நேரும் பாவமாகும்.

### 3. வர்ணுத்துவா

எழுத்துக்களைச் சரியாக உச்சரியாமல் குறிலை நெடிலாகவும் நெடிலைக் குறிலாகவும் ஓரின எழுத்தை வேறின வெழுத்தாகவும் உச்சரிப்பது வர்ணுத்துவாவினுல் வரும் குற்றமாகும்.

### 4. தத்துவாத்துவா

அறநெறிப்படி பொருளை ஈட்டாமலும்தீய நெறிக்கண் பொருளை அழப்பதாலும் நேருவது தத்துவாத்துவாவினுல் வரும் பாவமாகும்

### 5. புவனுத்துவா

புவனத்தலைவர்களைப் போற்றி வழிபடாமையால் நேருவது புவனுத்துவாவினுல் வரும் பாவமாகும்.

### 6. கலாத்துவா

இச்சா ஞானம் கிரியை ஆதிசக்தி பராசக்தி என்னும் ஐவகைச் சக்திகளைப் போற்றுது இகழ்வதனுல் நேருவது கலாத்துவாவினுல் நேரும் பாவமாகும்.

எனவே குருக்களின் இக் கருத்து மிகு தெளிவாகவும் செய்யவேண்டிய கிரியைகளிள் அக்கறை கொள்ள வேண்டிய அவசியத்தையும் காண்பிக்கின்றது.

யாழ்ப்பாணப் பெரியோரே நீண்ட காலமாக எம் சமயத்தில் விளக்கக் குறைவால் பல ஏமாற்றங்களுக்குள் நாம் செலுத்தப்பட்டோம். சந்திர தீபத்தினுடைய நோக்கம் எமது சைவநெறியில் கபடமோ ஏமாற்றமோ பொய்மையோ இலாது உயர்ந்த கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகி நாமும் நம் இனமும் உயருவோம்; எ பதாகும்.

இதுகாறும் நடந்தவை போக இனியாகிலும் நல்ல செயல்கட்கு நிதானமாகவும் பூரணமாகவும் சித்த சுத்தியுடன் செய்திடப் பழகிக் கொள்வோம்; கதா உபநிடதம் காட்டுவதை உணருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது சைவ ஆகமங்களும் கோயிலும் பாதுகாக்கப் படல் வேண்டும்.

## முத்திநெறிக்குரிய முனிவர் வழிபட்டு உய்ந்த தலங்களை மூர்க்கரும் மூடரும் நீர்வகிப்பாரோ? தேவ சந்நிதியால் பிரசாரம் நீங்கவேண்டும். இன்றைய பிரசாரம் அபசாரம் பெருக்கின்றது.

ஆகமங்கள் யாவும் இறைவன் கோவிலில் கருத்தரங்கு சமயப்பிரசாரம் இவை நடைபெறுவதை தவிர்க்கும் படியே மொழிவன. சைவம் என்ற சமயம் ஒன்றுதான் பிரசாரம் என்ற கோட்பாடு இலாதது. நமது சமயத்து உபதேசம் ஒழுக்கம் தொண்டு என்றதே கொள்கையாகும்.

இறைவன் சந்நிதியில் பிரசாரம் தவிர்ந்து வேறு மண்டபங்களில் நடைபெறல் நன்றெனச் சொல்வன. அதனாலே கோவில் புறமாக புராண மண்டபம் வேத ஆகம கருத்துணரும் மண்டபம் என்று எல்லாம் மண்டபங்கள் வேறாக இருப்பதாகச் சொல்லப் பெறுவன, இம் மண்டபங்கட்கும் கோயில் இறைவன் சந்நிதிக்கும் தொடர்பில்லை.

ஆதலினாலே கோயில் சந்நிதியில் பிரசாரம் கருத்தரங்கு வில்லிசை பிரசங்கம் அனைத்தும் நீக்கப்பட வேண்டியது பொது விதியாகும். கோயில் சந்நிதி பணி செய்வதற்கே உரியது, அவையாவன கூட்டுதல் கழுவல் மெழுகல் நந்தவனப் பணி செய்தல் பூக்கொய்தல் திருமஞ்சன நீர் கொணர்தல் திருமுறை எழுதல் வாசித்தல் என பெரிய புராணம் கணநாத நாயனார் புராணத்தால் தெளியலாம், இவையாவும் ஒழுங்காகவும் நடைபெற பயிற்சிகள் வேறு வேறு இடத்தில் நடைபெற்றன என கூறப்படுகிறது.

ஆனால் இன்று கோயில் பணி என்றால் ஒரு ஒலிபெருக்கி ஒரு பிரசங்கம் ஒரு பெரியவர் தலைமை தாங்கல் அடுத்து வேடிக்கை கேளிக்கை இப்படியான முறையே வந்து கொண்டது.

பல கோயில்களில் வழிபாட்டு முறைகள் சாட்டுக்காகச் செய்து பாட்டுக்கச்சேரியும் பிரசங்கமும் முக்கிய அம்சமாக வந்துள்ளது. சில கோயில்களில் பூசை நியதிகளிலும் பிரசங்கம் பிரசாரம் இவைக்கே முதன்மை கொடுபட்ட வரலாறுகள் நம் நாட்டில் நிறைய உண்டு. இவையாவும் விளக்கக்குறைவே! பிரசாரம் என்பது தொண்டின் பயிற்சியாக அமையாது அது ஏதோ வேறு பிரசங்கமாக வேடிக்கை கேளிக்கையின் பொழுது போக்காக வந்துள்ளது என்பதை யாரும் மறுக்க மாட்டார்.

இன்று கோயில் குனிந்து கூட்டுவது பூக் கொய்வது மாலை கட்டுவது பஞ்சி அலுப்பு கௌரவக் குறைவு என எண்ணும் பிரபலதன வந்தர்கள்; தாம் உண்ணும் போது பிறர் ஆரும் வந்தால் அல்லது கண்டால் கொடுப்பது கௌரவக் குறைவு (நியூசன்ஸ்) என்றும் ஆனால் தங்களைப் போன்ற செல்வந்தர்கள் பட்டம் பதவியாளர் வந்தால் இடங் கொடுத்து உபசரித்தும் இப்படியாக தம்மைத் தான் சாலவும் மதித்திடும் பெரியோர் சிலர் சமய விருத்தி செய்திட முனைகின்றனர்.

தனது இல்லத்து வருவாரது நிலை உணர முடியாதவர்; அருளின் சிறப்பால் அடக்கமும் நிதானமும் கொண்டு வாழும் அன்பரிடம் அன்பு கொள்ள மாட்டாதவர்; சமயம் விருத்தி அன்பு வளர்ச்சி செய்வதென்றால் அதை நான் தவறு எனச் சொல்லா திருந்தாலும் நன்மை யானது என்று சொல்ல மாட்டேன்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் வணங்கினார்க்கு வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் காண் பராபரமே எனத் தாயுமானவர் தெரிவிக்கின்றார், இதன் உண்மையை உணர்ந்தால் கோயிலை மூர்த்தியைத் தீர்த்தத்தை வணங்கி வழிபடுதலின் முக்கியச் சிறப்பைக் காணலாம்.

ஒழுங்காக இதைப் புரிவார்க்கு உண்மை நிலை உணர்த்த சற்குருதானாக வருவார் என்பது தாயுமானவர் குறிப்பு. மாணிக்க வாசகரும் இதனை "தானே வந்து எம்மைத் தலை அளித்து ஆட்கொண்டு" எனத் தம் பாடலில் மொழிகின்றார்.

திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்க வாசகர் இவர்யாரும் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக வணங்கினவரே! என்பதை யாவரும் அறிய வேண்டும். அவர்கள் போக்கில் நாம்ஒழுக முடியாது வேறு நிலையில் சமயப் பிரசாரத்தில் மட்டும் நாம் சமயம் விருத்தி செய்ய முடியாது!

நமது சமயத்தில் முறையான வழி பாட்டினை முதல் கோவிலில் நாம் புரிவோம். இன்று கோயில் எல்லா வற்றிலும் சென்று வழிபட முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டுக் கொண்டது. காரணம் கோயில் ஓர் தரும நிலையம் என்பதை விடுத்து அது ஓர் வியாபார நிலையம் பணம் பறிக்கும் நிலையமாக மாறி வருவதே காரணம். இதை நாம் தீபத்தில் அடிக்கடி சுட்டிக் காண் பித்தோம்! இதை இன்று விளங்குவார் ஏற்பார் மிகச் சிலரே!

கோவிலில் நடைபெற வேண்டிய நன்முறைகளான வணக்கங்கள் கெட்டு வேறு பிரசாரம் என்ற புதியநிலை வந்து கொண்டது.

எமது கோவிலில் இந்த பிரசாரக் கூட்டத்தில் சொற் பொழிவுசெய்வார் தலைமைப் பதவி இவை தாங்கினார் எவருமே ஒருக்காலும் அக் கோவிலை வலம் வந்திருக்கார்! அப்படி கோவிலை வலம் வந்து கும்பிட முடியாதவர் பின்னர் தாங்கள் பிறர்க்கு உபதேசித்தல் என்பது பொருந்தாத செயல்! எனெனில் தாம் ஒழுகாததை பிறரைச் செய்யச் சொல்லி எவ்வாறு கேட்கலாம்?

நாயன்மார் காலத்து என்றுமே கோயிலில் பிரசாரம் என்ற பேச்சிற்கு இடமே இல்லை. அப்படியாக எங்காகிலும் நடந்தது என நாயன்மார் வரலாறு கொண்டு நிரூபிக்க முடியுமானால் நான் அன்றுடன் பத்திரிகைப் பணியை நிறுத்திக் கொண்டு மன்னிப்பு கோருவேன்,

பிரசார மென்ற குளப்படி கோயிலில் ஆறுமுக நாவலர் காலத்திலிருந்துதான் வலுப் பெற்றது, ஆறுமுக நாவலர் செய்யத் தொடங்கிய தொடக்கி விட்ட பிரசார முனைப்பு பிரசங்கமாகி வில் இசையாகி பொப் பிசையாகி இன்று கோவில் சந்நி தானத்தில் "கல்லோமிஸ் மைடியர் டார்லிங் எங்கேபோறிங்க" என்ற வகைப் பாடல்கள் இடம் பெறும் இடமாக வந்து கொண்டது. எந்த ஒரு பிரசாரம் சமய வளர்ச்சிக் கழகம் சமய பத்திரிகை இது தவறு என மொழிந்து எதிர்த்து ..... பிக்க முடியுமா? ஆகவே பிரசாரம் புகழுக்கு தம்முடைய ...... தததே அன்றி கடவுள் அருள் பேண தொண்டாக அமையவில்லை ஆதலின் சமயத்து அருள் பேணக் கொண்ட விருப்பத்தால் கோயில் சந்நிதானத்தில் இவைகளை தயவு செய்து நீக்குங்கள்; இவை மேன்மையானவை அன்று; கீழ்மையான செயல்களுக்கே இன்று பிரசாரம் வழி தேடுகின்றது என உண்மை நிலையை நம் பத்திரிகை மூலம் சுட்டிக் காட்ட வேண்டி வந்தது.

தென் இந்தியப் பிரசாரகர் பலர் தமது பிரசாரத்தை பணத்திற்காகவே செய்கின்றனர். தென்இந்திய பிரசாரகரில் அவர் கல்விக்குரிய ஒழுக்கமில்லை. பிரசாரம்என்று இலங்கைவந்து போனவர்களில் தகாத முறையில் பணங்கொண்டு போகாதவர் யாருமே இலர். இவரது பிரசாரத்தை அறிவுடையார் விரும்புவரோ?

பிரசாரத்தை கருத்தரங்குகளை வைத்து தேர்ச்சி பெறவேண்டாமென்று நாம் சொல்லவரவில்லை. அவற்றை கோவில் உட்பிரகாரத்து இல்லாது வணக்கத்திற்குரிய இடத்தில் இல்லாது வேறு மண்டபங்களைக் கட்டி அந்த மண்டபங்களில் நன்கு நிகழ்த்துங்கள். நாட்டியமோ இசையோ கூத்தோ பொப்போ வில்லோ சொல்லோ பைலாவோ எதையும் அங்கு வையுங்கள். கோயில் கும்பிடுவார்க்கே உரியது. ஏனைய செயல் ஆகாது.

ஆறுமுக நாவலர் இந்த பிரசார முறையில் போய் இராமலிங்க சுவாமிகளுடன் வாதாட வேண்டி வந்தது. பிற சமயங்களைக் கண்டிக்க வேண்டி வந்து பல நிலைக்குள் துயருற்றனர்.

நாயன்மார்கள் ஒருவரும் அப்படிச் செய்யவில்லை, அவர்கள் கோவிலை வணக்கத்திற்குரிய இடமாகக் கருதிப் பாடிப் பணிந்தனர். இந்த வகை கருத்தரங்கு முதல் பல செயலும் எம் கோவிலில் வைப்போர் சொற்கம்என நினைந்து நரகத்துள் கால் வைக்கின்றனர். நிர்வாகம் இந்த பிரசாரக் கூட்டத்திற்கு இடமளித்திடாது கோயிலை புனிதநிலையில் வைப்பது கடன்ஆதலினால் இவற்றினை உணர்ந்து நமது கோவிலை நாயன்மார் காலத்தில் இருந்த புண்ணிய நிலைக்கு வரச்செய்ய நாம் அனைவரும் முயலவேண்டும்.

முற்பக்கத்தில் தரப்பட்ட தேவாரம் இதற்கு நல்ல தெளிவு காட்டுகின்றது.

## பல கோவிலில் ஒலிபெருக்கி வெருளித் தனம் மட்டின்றி மிஞ்சியது.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்து மூன்றும் திருவிழா அன்று ஒலி பெருக்கி பாடத் தொடங்கியது, ஊரடங்க ஓல மிடும் கொள்கையில் கோயில் நடு முகட்டின் மேலே ஓர் தம்பம் நட்டு அத்தம்பத்தின் உச்சியில் நாலு திக்கிலும் ஓசை பல மைல் தூரம் கேட்கும் படி நாலு குளாய் கட்டி ஒலிபெருக்கி பாவனை நடக்கின்றது.

உண்மையாக ஆகமம் விளங்கிய எவரும் அச் செயலை நன்று எனவே சொல்லார். புலமை என்று தம்மை வெளிப்படக் காட்டி புலையரின் கீழ்மைச் செயலைச் செய்வார் தற்புகழ்ச்சியின் திருவிளையாடல் தொடங்கின் அதற்கு எல்லை பிறர் வருந்தி மனம் நோகுமாறே வந்து விடும்,

ஓர் ஆலயத்தில் இருந்து எழும் ஓசை அதற்கு ஓர் மட்டு இருக்கின்றது. ஒலிபெருக்கியை வைத்து தாம் ஒழுக்கமிலாது நடந்து கொண்டு பிறர்க்கு தென் இந்தியாவிலிருந்து இங்கு வந்து கள்ளக்கடத்தலில் காசு கொண்டோடும் கள்ளப் பிரசங்கியளின் ஒலிப்பதிவு பிரசங்கம் பாட்டு போட்டு ஊரார்க்கு எங்கள் கோயில் பெரிது பாருங்கோ என்று வீம்பு காட்டுவதை அருள் வழியில் தெளிவு கொண்டோர் யாவரும்இகழ்வார். அவர்கள் சொல்லும் ஒருவார்த்தை இரு வெருளித்தனம் என்றதாகும்,

அருகாமையில் உள்ள ஆனைக்கோட்டை சம்பந்தர் பிள்ளையார் கோவிலில் இதே போன்ற மட்டிலாத ஓசை பெருக்கும் ஒலிபெருக்கி பாவனை நடந்தது. சுவாமிக்கு பூசை யாகபூசை கும்பபூசை இவற்றிற்கும் ஒலிபெருக்கி குளறல் நிறுத்தப் படவில்லை. குருக்கள் யாகமண்டபத்துச் சென்று கும்பங்களின் முன் நின்று உரிய மந்திரம் சொல்லி பூசை பண்ண முடியவில்லை என கவலைப்பட்டார் கொடுமைக்குகோயிலா இடம்?

## நாகர் கோயிலில் முறையிலாத பிரசாரம்.

கடந்த 14-7-79 இரவு 8 மணியளவில் நல்லை ஆதீனம் ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பிரசங்கம் செய்ய வந்தார்கள். அந்நேரம் சிவாச்சாரியார்கள் யாக மண்டபத்தில் கிரியை தொடங்கி விட்டனர். இருந்தும் தம்பிரான் சுவாமிகள் கால் கூடக்கழுவாது பலிப்பீடம்வரை சென்று பிரதம குருக்களுடம் ஏதோ பேசி கிரியைகளை இடை நிறுத்தி தன் அதிகப் பிரசங்கித் தனத்தை தொடங்கி விட்டார்கள். இது மட்டுமா? மறுநாள் நண்பகல் 12 மணிவரையில் குடமுழுக்கு முடித்து மூலமூர்த்திக்கு விஷேச பூசை நடந்துகொண்டிருக்கையில் பிரவேசித்த சுவாமிகள் தம்ப மண்டபத்திலிருந்து கொண்டு தடாதகை கல்யாணம் பிரசங்கிக்கத் தொடங்கி விட்டார். இது முறையான செயலா? இப்படிப்பட்ட சமயப் பிரசாரர்கட்கு பரிபாலன சபையினர் பெருந் தொகையான பணம் கொடுத்துப் பேசிவிப்பது அவசியமா!

நால்வர் காட்டிய வழியே நம்வழியென்று ஒழுகுகின்ற எம் முன்னோர்க்கு அப்பர் சுவாமிகள் பாடிப் பணிந்து காட்டியவழி "பூமாலைபுனைந்தேத்தி புகழ்ந்து பாடி தலையாரக் கும்பிட்டு என்பதாம். இதன்படி இறைவர்க்குப் பூமாலை சாத்தி வணங்க விரும்பிய அடியார்கள் ரூபா 1 வரிப்பணம் செலுத்த வேண்டுமாம் இது முறையா? பூமரம் நாட்டவும் மலர் பறித்துக் கொடுக்கவும் ஆளில்லாத இக்காலத்தில் மனமுருக மலர்மாலை தேடிக் கொண்டு வரும் அடியார்க்கு தெண்டம் ரூபா ஒன்றா? (தகவல் க. குமாரசாமி குடாரம்பூர் நாகர்கோவில்)

இயற்றியது கொக்குவில் மேற்கில் இருக்கும் கந்தபுராண பெரிய புராண விரிவுரையாளர் திரு வை நல்லையா அவர்களால் இலங்கைமணி சைவஹற்பதிப்பகத்தில் பிரதிபண்ணப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org